No. 44 7 Nov 1933

JL
0M211, N28K4
N336.44.
189168

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ஆு நவம்பர் மீ 9உ [No. 44

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 789
2. கம்பராமாயணம் (அயோமுகிப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 791
3. அப்பர் (64 கலை-வியாகரணம்-அறுசீர்ச் சந்த விருத்தம்)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 794
4. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 2-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 796
5. யாப்பிலக்கணம்—பொருள்கோள்
வித்துவான், M. V. வேணுகோபாலப் பிள்ளை 798
6. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்தந்தாதி 800
7. கலித்தொகை (பாலைக்கலி, 33)
T. A. கனகசபாபதி முதலியார் 802
8. வர்த்தமானம் 804

கலாநிலயம்

189168

யானையை விளம்பித் தேரையை யியற்றல்.

மனமொன்று எண்ண வாயொன்று பேசுவதை வஞ்சனை என்று அழைப்பார். நாலு காசு கைப்பற்ற இவ்வகை வஞ்சனை பயில்வோர் இகழப்படுகின்றனர். இனி, இகழ்வோர் எல்லோரும் அதனைப் பயில்வார் அல்லாதாரு மல்லர். வஞ்சனை சிறிதேனும் இல்லாமல் இந்நாள் வாழ்வது இயலாது என்னும் கொள்கை சொல்லாமலும் சொல்லியும் கையாளப் பெற்றுவருகின்றது. இவ்விடயம்வேறு.எனினும் மனமொன்று எண்ண வாயொன்று பேசும் வஞ்சனைக்கு ஒன்றும் அதிகம் அஞ்சவேண்டா. இதனை யாவரும் அறிவாராதலின், அறிந்தவொரு தீங்கினின்று தப்புவது எளிது. அன்றியும் பெரும்பாலும் இது ஒருவருக் கொருவர் புரியப் பெறுவதால், முன்னைய தலையங்கக் கட்டுரையில் காட்டியதுபோல், கடைக்குப் பின்னின்று விற்போரும் முன்னின்று வாங்குவோரும் என்ன, ஒருவர் வஞ்சனைக்கு மற்றவர் வஞ்சனை விஷமாகித் தீரலாம். இனி, உள்ளத்தில் ஒன்றும் வைக்காமல் புறத்தே பல பேசும் பேதைப் பிரசாரங்களால் வரும் தீமைகளைப் பண்டு ஓர் கட்டுரையில் விளக்கியிருக்கின்றோம் (2-வது வால்யூம். 421. 441. 461.) "இந்தியா இப்பொழுது மிகவும் தாழ்ந்தநிலையில் இருக்கின்றதென்றும், அது பெருமையும் சிறப்பும் அடையும்படி செய்யவேண்டியது நம்முடைய கடமையென்றும், நாமெல்லாம் ஒற்றுமையாயிருந்து முன்னேற்றம் அடையவேண்டுமென்றும், மற்றைய நாடுகள் இந்நாள் சிறப்புற்றிருப்பதற்குக் காரணங்கள் இவை இவை யென்றும்,சுதந்தரத்தைப் பெறவேண்டுமென்றும், கல்வியைப் பரப்பவேண்டு மென்றும், கைத்தொழிலை வர்த்தகத்தை வளர்க்கவேண்டுமென்றும்,இன்ன முன்னேற்றங்களைச்சாதிப்பதற்குநம்முடைய மூடபக்தியும் பண்டைய பழக்க வழக்கங்களும் இடையூறாகி இருக்கின்றனவென்றும், ஆகையால் அவை ஒழியவேண்டுமென்றும், இப்படியே எத்தனையோ செவிடுபடப் பேசப்படுகின்றபேச்சுக்கள் அனைத்தும், பயன்கிடக்க, பொருளும் அற்றவைகள் என்பதனையும், பொருளற்றவைகளாதலின் இன்னவைகளைப் பேசுவோர் தம் உள்ளத்தில் ஒன்றும் வைத்திருக்க இயலாதென்பதனையும் அக்கட்டுரையில் விளக்கி, இவ்வண்ணம் உள்ளொன்றும் வைக்காமல் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டப்படுதலின் நன்மையை வற்புறுத்தினோம். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல் பேரெடுத்த வஞ்சனை; உள்ளொன்றும் வைக்காமற் புறமொன்று பேசுதல், வஞ்சனையென்ற பேரின்றியேயும் அதனினுங் கொடியது. இனி, எண்ணியது நல்லதேயாகப் புல்லியது பேசுகின்ற புந்தியின் போக்கையுஞ் சிறிது காணலாம். சிறியவர் செய்திகளிலன்றிப் பெரியோர் எனக் கருதப்படுபவர் திறத்தில் இவ்விபரிதம் விளையுந் தன்மையை விளக்குவதால் பயனுண்டு. இதனை விளக்க, இட்டலி தேயத்து வீரரென்று பெயர்பெற்ற ஜோஸப் மஸ்ஸீனி (Joseph Mazzini) என்பவர் தம் உரைகள் நமக்கு இச்செவ்வியில் அதிகமும் உதவக்கூடியவைகளாக இருக்கின்றன.

ஜோஸப் மஸ்ஸீனி என்னும் இவர் இட்டலி தே

யத்தில், 1865-ம் வருடத்தில் பிறந்து, 1872-ம் வருடத்தில் இறந்தார். அவர்காலத்தில் இட்டலிதேயம் பெரும்பாலும் இப்பொழுது இந்தியா இருக்கின்ற நிலையில் இருந்தது. ஆஸ்டரியா தேயம் இட்டாலி தேயத்தைத் தன் அதிகாரத்திற்குள் அடக்கிக்கொண்டு, தன்னுடைய இலாபத்திற்குரியவைகளையே நாடி இட்டலியைப் பற்பலவாறு வருத்தியதென்றும், இட்டலியர் இந்த அடிமைத்தனத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளப் பற்பல வகைகளில் முயன்றனர்கள் என்றும், இம்முயற்சியில் இட்டலிதேயத்தவர்களுக்குள்ளேயே வலியோர் மெலியோரை நலியாமல் காக்கவேண்டி நேர்ந்ததென்றும், அவர் வருத்திய வகைகளும் இவர் முயன்ற வகைகளும் இன்னவாறு இருந்தனவென்றுஞ் சரித்திரங்கள் கூறும். இவ்வகை நிலையில் சனங்களும் தலைவர்களும் பேசுவனவும் செய்வனவும் எவ்வண்ணம் அமையுமென்பதை, அயல்நாட்டு ஆட்சியினின்றும், அதனால் விளைந்ததென்று கருதப்படும் வறுமையினின்றும் இந்தியர் விடுதலையடைந்து சுதந்தரமும் சம உரிமையும் பெற்று எல்லா நன்மைகளையும் எய்தவேண்டுமென்று நடமாடுகின்ற இக்காலக் காரியங்களினின்று ஊகித்துக்கொள்ளலாம். வறுமையால் பீடிக்கப்பட்டவர்களை நினைந்து அன்று அவ் விட்டாலித் தலைவர்கள் இரங்கினார். ஆஸ்ட்ரிய ஆட்சியைத் தொலைத்தற்குரிய புரட்சிகளைப் புரிந்தனர். தொழிலாளிகள் சார்புநின்று முதலாளிகளை வணக்க முற்பட்டனர். ஆட்சிமுறையிலுள்ள தீமைகளை விலக்கி நாட்டின் செல்வத்தை அன்னியர் கொள்ளைகொள்ளாமல் தடுக்க முயன்றனர். சனங்களின் உரிமையை எடுத்துப் பேசினார்; ஒற்றுமைவேண்டுமென்று நாடினார். ஆஸ்ட்ரியர்களும் இட்டாலியர்களின் இம்முயற்சிகள் நிறைவேறுவண்ணம் தடுக்கவல்ல வகைகளையெல்லாம் கையாண்டு தடுக்கலாயினார். இத்தனையும் இந்நாள் இந்தியர் அறிவார். அந்நாள் இட்டலியின் அரசியல் நிலைஇன்னதே. அன்னவர்களுக்கிடையே, முடிமன்னர் நடுங்கும்படி முழங்கிக் குடிகள் நன்மைக்கும் சுதந்தரத்திற்கும் பாடுபட்ட வீரர் எனலாவார் இந்த மஸ்ஸீனி என்பவர். இவர், இத்துறையில் உழைத்திருந்த ஏனையோர் நெறிகளும் முறைகளும் நேரானவைகள் அல்ல எனக் கூறுவதும், ஏனையோர் இவர் முறையே பயனற்றதென்று பகர்வதும், நேர்ந்தன. ஆழ்ந்த கொள்கையொன்றை அடிப்படையாக வைத்து அது நிறைவேறும் வண்ணம் சுயநலங் கருதாமல் சனங்கள் உழைத்தாலல்லது இட்டாலியர் உய்யமாட்டாரென்றும்,கொள்கையொன்றுமின்றி அவ்வப்போது தோன்றுகின்ற தீமைகளை மாத்திரம் தடுப்பதற்குரியவைகளைச் செய்ய முயல்வதால் பயனில்லை என்றும் இவர் வற்புறுத்தினார். ஏனையோர், பசியினால் சனங்கள் மடியக்கண்டும், செல்வம் பெருகி எல்லாரும் இன்புற்றிருப்பதற் குரியவைகளை உடனே செய்யமுடியாமல், 'கொள்கை கொள்கை' என்றொன்றை வீணே கழறிக்கொண்டிருப்பதால் ஏது பயன், என இவரை மறுத்தனர். அன்னவர்க்குப் பின்வருமாறு மஸ்ஸீனி ஓர் கட்டுரையில் பதிற் கூறுகின்றார்:—

"எம்மைப்போல் அரசியல் பொதுதர்மங்களில பற்றுவைத்துக் கொள்கைகளையே வற்புறுத்துவோரை இக்காலம் பலர் குறை கூறுகின்றனர். சனங்களுடைய செல்வம் சுகங்களைப்பற்றி நாங்கள் கருதுவதில்லையாம்; கண்ணிற்காணும் விடயங்களைக் கவனிக்காமல் கருத்தில் தோன்றும் கொள்கைகளையே கொண்டாடுகின்றோமாம்; இது எங்கள்மீது அவர் சார்த்துங் குற்றம். அன்னவர் கூறுகின்றார்: — "நீங்களெல்லாரும் கனாக் காண்கின்றவர். கொள்கைகளைப்பற்றி நீங்கள் பேசுவதால் என்ன பயன்? அவை மெல்ல மெல்லவே முதிரும். மிகமிகச் சிலரே அவைகளை அறிந்துகொள்ள வல்லவர்கள். இப்பொழுது நடைபெறுகின்ற விடயங்களைப் பற்றிய முயற்சியே எங்களுக்கு வேண்டும். காற்றிலே உயர உயரத் திரிவதால் பயனில்லை. நாங்கள் உங்களை அங்குத் தொடர்ந்து வரமாட்டோம். தரையிடம் இறங்கி வாரும். பொதுவாகப் பேசுவதைவிட்டு இப்பொழுது செய்யவேண்டிய காரியங்களைக் கைக்கொள்வதன்றோ நேர். நாங்கள் கண்ணாற் காணக்கூடியவைகளைப் பற்றிப் பேசினால் பயனுண்டு. செய்கையிற் சேராமல் கருத்தினைச் சார்ந்த கொள்கைகளைக் காட்டிச் சனங்களை முன்னேறச் செய்துவிடலாமென்பது உமது எண்ணமோ? உண்ண உணவின்றி அதோ சாகின்றார் சனங்கள்; கட்டத் துணியின்றிக் குளிரால் விறைக்கின்றனர். மானுடச் சிறப்பும் மதப்பற்றின் ஒற்றுமையும், உணவும் உடையும் ஒருபோதும் அளிக்காவே. சனங்களுக்கு வேண்டியன இவைகளே. பொதுஜனங்களுக்கு அவர்களின் உரிமையைக் கற்றுக்கொடு. நம்மை ஆள்வோர் செய்யுந் தீமைகளையும், நடத்தும் அநீதிகளையும், புரியும் இழிவுகளையும் ஒவ்வொன்றாய் வெளியாக்கிச் சொல். சனங்களின் உரிமையைக் கெடுக்கின்ற அதிகாரிகளின் காரியங்களைப் பழித்துச் சொல். சனங்களின் காதுதோறும் விடுதலையின் நன்மையை விளம்புவாய். எல்லாவற்றையும் எதிர்க்கவேண்டுமென்பதே இக்காலத்தின் கடன். எனின், நீயே இவ்வெதிர்ப்பை நடத்திச் செல். நம்மைச் சூழ்ந்திருக்கும் இந்தக் கலகக் குழப்பங்களின் இடையே, எல்லாப் பக்கங்களிலும் நம்மை வந்து அழுத்தும் இவ் வரசியல்வாதங்களின் இடையே, நீ செப்பும் சாந்தத்திற்கும் அமைதிக்கும், அன்பையும் மதத்தையும் பற்றி நீ பேசும் திறனற்ற சொற்களுக்கும் யாரேனும் செவிகொடுப்பாரென்று வீணெண்ணம்வைத்திருக்காதே. வருங்காலத்தையும் அதனில் நாம் எதிர்பார்க்கக்கூடியவைகளையும் சும்மா விட்டுவிடு. நிகழ்காலத்திற்கே நாம் நம்முடைய எண்ணம் அத்தனையும் செலுத்தவேண்டியவர்களாயிருக்கின்றோம். இதற்கே உன்னை அற்பணம் செய்துகொள்; ஆன்ம சக்தியையும் கடவுள் நிலையையும் கழறிக்கழறி எங்களை நீ வீணாக்கவேண்டா."

சிறியன சிந்தியாமல் தான் பெரிய நோக்கங்களையே மேற்கொண்டு உழைத்து அந்நிலைக்கு மற்றவர்களையும் கொண்டுவர முயல்கின்றாரென்றும், அதன் மேன்மையை உணரமாட்டாத ஏனையோர் தன்மீது சார்த்துகின்ற குற்றங்கள் இன்னவைகளென்றும் மஸ்ஸீனி எடுத்துக் காட்டியவற்றை மேலே மொழிபெயர்த்து எழுதினோம். இன்னதற்கு அவர் எதிர் உரைப்பவைகளையும் காணலாம்:—

" இவ்வாறு பேசுகின்றவர், என்போன்றவர்களைக் கனாக்காண்கின்றவர்களென்று அழைத்துவிடுவதால் எம் கொள்கைகளை அடியுடன் அழித்துவிட்டார்களென்று நிச்சயஞ் செய்துகொள்கின்றனர். நன்று. கருமமே கண்ணாயிருக்கவேண்டுமென்று வற்புறுத்தும் இவர்கள் தாம் என்ன சாதித்துவிட்டனர். இவர்கள் சொல்வனவெல்லாம் இதன்முன் எத்தனையோ முறை சொல்லப்பெற்றிருக்கின்றன. இவர்கள் செய்வனவெல்லாம் இதன்முன் எத்தனையோமுறை செய்யப்பெற்றிருக்கின்றன— ஒருபோதும் பயன்பட்டதில்லையே. ஆகையாற்றான் நான் இவைகளைச் சொல்கின்றேன்—'உயரிய கொள்கைகளைக் கைக்கொள்ளுங்கள். இப்பொழுது இருட்டில்உழல்கின்ற சனங்களை, மானுட அன்பின்பாலும் கடவுள்பாலும் நடத்தி முன்னேறச் செய்யுங்கள். கணக்கெடுக்கும் எந்திரங்களாக மனிதரை மாற்ற வேண்டா. தருமசிந்தனையையும் கடமையின்பால் நிலைத்த உணர்வையும்மீண்டும் எழுப்பிக்கொடுங்கள். பெரிய பெரிய கருத்துக்களை இளைஞருக்கு உருச்செய்து காட்டுங்கள். மதத்தின்பாலும் அன்பின்பாலும் ஊக்கம் விளைவித்துப் புதியதோர் தருமவாழ்க்கையைச் சனங்களுக்குச் செய்துகொடுங்கள். பொதுவிடயங்களில் இவ்வுயரிய நோக்கங்களன்றி வேறு நோக்கங்கள் எல்லாம் பயனற்றவை. இவைகளை விட்டு வேறு அமைக்கின்ற அரசியல் திட்டங்கள், சிலந்தியின் வலையையே ஒக்கும். சிறு பூச்சிகளை மட்டுமே சிறைப்படுத்துகின்ற சிலந்தி வலை பெரிய பூச்சிகளால் பிய்த்தெறியப்படுகின்றதன்றோ !"

இச் சொற்கள் மிகமிகப் பெரியனவாயொலிக்கின்றன.. எனினும், இம் மஸ்ஸீனி, கைக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துகின்ற கொள்கைகள் தாம் உண்மையில் எவ்வகையன என்பதைச் சோதிக்கும்போது இவ்வொலியின் பெருமை உட்கருத்தில் இல்லையே. இன்ன தன்மையை இனிப் பார்ப்போம்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்— 9. அயோமுகிப் படலம்.

[787-வது பக்கத் தொடர்ச்சி]

நேசமி லாசை யன்பென லாமோ.

இலக்குவனைக் கண்டு எதிர்வருகின்ற இவ்வரக்கி அயோமுகியின் தோற்றத்தைக் கம்பர் சில பாசுரங்களில் காட்டுகின்றனர்.

உயிர்ப்பி னெருப்புமிழ் கின்றன ளொன்ற
எயிற்றின் மலைக்குல மென்றினி துண்ணும்
வயிற்று வயக்கொடு மாசுணம் வீசு
கயிற்றி னிசைத்த முலைக்குழி கண்ணாள்

[மூச்சினோடு நெருப்பைக் கக்குகின்றவளும், பற்களால் ஒன்றுசேர மலைகளை மென்று இனிது உண்ணும் வயிற்றையும், வலியகொடிய பாம்புகளாகிய நீண்ட கயிற்றினால் கட்டிய முலைகளையும், குழியிட்ட கண்களையும் உடையவளும்]

பற்றிய கோளரி யாளி பணிக்கட்
டெற்றிய பாத சிலம்பு தரித்தாள்
இற்றுக யாவையு மீறுறு மந்நாள்
முற்றிய ஞாயிறு போலு முகத்தாள்

[ஒன்றை ஒன்று பிடித்துக்கொண்டிருக்கின்ற வலிய சிங்கங்களையும் யாளிகளையும் பாம்புகளில் சேர்த்துக் கட்டிய பாதசரத்தை அணிந்திருப்பவளும், எல்லாம் அழிந்து விழும்படி முடிகின்ற அவ் ஊழிக்காலத்தில் முதிர்ந்த சூரியனை ஒத்த முகத்தையுடையவளும்]

ஆழி வறக்க முகக்க வமைந்த
மூழை யெனப்பொலி மொய்பில வாயாள்
கூழை புறத்து விரிந்ததொர் கொட்பால்
ஊழி நெருப்பி னுருத்தனை யொப்பாள்

[கடல் வறளும்படி மொள்ளுவதற்கு அமைந்த குகை போலத் தோன்றும் வலிய பிலம்போன்ற வாயையுடையவளும், அவள் மயிர் முதுகில் விரிந்து புரளுந்தன்மையால் ஊழித்தீயின் உருவத்தை ஒப்பவளும்]

தடிதட வத்தலை பலதழு வத்தாள்
நெடிதடை யக்குடர் கெழுமு நிணத்தூண்
படிதட வப்பல பாவ மிசைக்குங்
கடிதட வத்தின ளுருமு கறிப்பாள்

[அளவுகோல் அளக்கின்ற தூரங்கள் பல தன் ஒரு அடிவைப்பிலே அடங்கும்படி கால்கள் தாவி நடப்பவளும், குடலில் நிறைந்த மாமிச உணவு வெளிப்பட்டுத் தரையிற் சிந்துபவளும், பல பாவங்கள் பொருந்திய கடிதடத்தை யுடையவளும், இடியைப் போன்று பற்களைக் கடிப்பவளும்]

இவையிறை யொப்பன வென்ன விழிப்பாள்
அவைகுளி ரக்கடி தழலு மெயிற்றாள்
குவைகுலை யக்கடல் குவிய வலைப்பாள்
நவையில் புவித்திரு நாண நடப்பாள்

[இக்கண்கள் ஊழித்தீயை ஒக்கும் என்னும்படி விழிப்பவளும், அக்கண்களே குளிர்ந்தன என்னும்படி கொடுமையாக எரியும் பற்களையுடையவளும், மலைகள் நிலைபெயரவும் கடல்கள் ஒன்றுசேரவும், குற்றமற்ற பூமிதேவி நாணும்படி நடப்பவளும்]

நீளர வச்சரி தாழ்கை நிரைத்தாள்
ஆளர வப்புலி யார மணித்தாள்
யாளியி னைப்பல தாலி யிசைத்தாள்
கோளரி யைக்கொடு தாழ்குழை யிட்டாள்

[நீண்ட பாம்புகளைத் தொங்குகின்ற தன் கைகளில் வரிசையாக அணிந்தவளும், இரைகின்ற ஆண்புலிகளை மாலையாக அணிந்தவளும், பல யாளிகளைக் கோத்துத் தாலியாகக் கட்டிக்கொண்டிருப்பவளும், வலிய சிங்கங்களைத் தன் காதணியாகத் தொங்கவிட்டுக்கொண்டிருப்பவளும்]

நின்றன ளாசையி னீர்கலு ழுங்கண்
குன்றி நிகர்ப்ப குளிர்ப்ப விழிப்பாள்
மின்றிரி கின்ற வெயிற்றின் விளக்காற்
கன்றிரு ளிற்றிரி கோளரி கண்டான்.

[ஆகிய அயோமுகி, குன்றி மணியை ஒத்தனவாகியும், ஆசையால் நீர் சொரிவனவாகியும் இருந்த தன் கண்களால் குளிர்ந்து விழித்தாள். அவளை, அடர்ந்த இருட்டில் திரிகின்ற வலிய சிங்கம்போன்ற இலக்குமணன், ஒளி வீசுகின்ற அவள் பற்களின் வெளிச்சத்தால் கண்டான்]

இன்னவளை அவ்விளவீரன் கண்டவண்ணந் தெரிகின்றதேயன்றி, இவளைத்தொட்டு அத்தாலியைக் கட்டிய மணாளன் எத்தகையனோ என்பதைச் சிந்திக்கப் புகுந்த பரிசு தெரிந்ததில்லை. அதனைச் சிந்திப்பதன் முன் அவள் நாசியே தன் நீளத்தால் இவன் கருத்தினை முற்றக்கவர்ந்ததுபோலும். அவ்வெண்ணத்தின் தொடர்பால் வேறு நினைப்பவனாகி,

பண்டையி னாசி யிழந்து பதைக்குந்
திண்டிற லாளொடு தாடகை சேராள்
கண்டக ராய வரக்கர் கணத்தோர்
ஒண்டொடி யாமிவ ளென்ப துணர்ந்தான்

[முன்பு மூக்கினை இழந்து வருந்திய மிக்க வலியுடைய சூர்ப்பணகையுடன் தாடகையையும் ஒத்த தன்மையுடையவளாகிய இவள் தீய அரக்கர் இனத்தைச் சேர்ந்த ஓர் பெண் ஆவாள் என்பதை உணர்ந்தான்]

கருத்தின் வழி கைசெல்லு மென்பது ஒருபுறம் உண்மையாயினும் கைப்பழக்கத்தின் வழி கருத்துச் செல்லு மென்னும் மறுபுறமும் உண்மையே. வான்மீகத்தை நினைப்போமெனின், தாடகையின் முலைகளோடு மூக்கையும் காதையும் அறுத்துள்ள இவ்வீரனுக்கு இச்செயல் இளமைப் பழக்கமாம்; பின்னர் அப்பழக்கமே சூர்ப்பணகையின்பால் முதிர்ந்தது— விளையும் பயிர் முளையிலே—அயோமுகியைக் கண்டவுடன், ஆதலின் அவன் நோக்கம் நாசியைக் கதுவத் துவக்கியதில் யாதும் அதிசயமில்லை. இனி இவளுக்கும் இந்தச் சிதைவே செய்து முடிக்கின்றான். ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று குறிக்கோள்; இலக்குவனுக்கு அரக்கியர் மூக்கும் முலையும். இவன் கைகளைத் தினவு தின்கின்றன. அதற்கிடையே,

பாவிய ராமிவர் பண்பிலர் நம்பால்
மேவிய காரணம் வேறிலை யென்பான்
மாவியல் கானின் வயங்கிருள் வந்தாய்
யாவ ளடையுரை செய்கடி தென்றான்

[இவர் பாவியர், நற்குணமில்லாதவர், இவர் நம்மிடம் வருவதற்கு உரிய காரணம், தாடகையைப் போல் நம்மைக் கொல்லவோ அல்லது சூர்ப்பணகையைப் போல் நம்மைப் புல்லவோ அன்றி வேறு இல்லை,என்றெண்ணின

வனுகி, "மிருகங்கள் திரிகின்ற இக் காட்டில் அடர்ந்த இருளில் வந்தவளே யாரடீ நீ, விரைவாகச் சொல்" என்றான்]

இன்னதோர் கேள்விக்கு இவ்வயோமுகியே யனைய நிலையிலிருந்த அரக்கியர்களில் இரண்டொருவர் தம் வரவின் செய்தியைச் சொல்ல நேர்ந்துளது. இராமனுக்கு எதிரே, வஞ்சியென நஞ்சமென வந்த அவ் வஞ்சமகள் சூர்ப்பணகை,

தாமுறு காமத் தன்மை
　　தாங்களே யுரைப்ப தென்ப
தாமெனி லாவ தன்றால்
　　அருங்குல மகளிர்க் கம்மா
ஏமுறு முயிர்க்கு நோவேன்
　　என்செய்கேன் யாரு மில்லேன்
காமனென் றொருவன் செய்யும்
　　வன்மையைக் காத்தி யென்றாள்

மோகத்தில் முதிர்ந்த சூழ்ச்சியேயன்றிக் காதலால் கனிந்த வாசகமன்று அது. அரக்கியொருத்தி நாணிக் கண் புதைக்கும் ஓர் மெல்லியல் நங்கையென நடிக்க முயலுந்திறத்தினை இச்சூர்ப்பணகையின் சொற்களில் காணலாம். மானிட இனத்தில் மெய்க்காதல் கூர்கின்ற மாதரார் இன்னணம் பேசமாட்டார். அரக்கியொருத்திமானுடப்பெண்ணாகநடிக்கப்புகுந்தபோது புகுந்த பிழை இது. பசையற்ற நெஞ்சத்துப் பரத்தையர்க்குரிய இந்நாணமில்லா நாணச்சொற்களே அருங்குலமகளிர்க் கமைந்ததென் றவள் பிழையுறக் கருதினாள். மையலூட்டும் இஃதனைய வஞ்சனைச்சொற்கள் மானுட மகளிரில் இழிந்தோர்க்கோ இயன்றிருக்க, காவுரை கற்கவேண்டாச்சழக்கியேன் இதனை ஏற்றுக் கொண்டனள் என்று இளிவர நக்குப் பரிகசிப்பாள் போல், பின், வீமசேனனை முயங்க விழைந்த சழக்கியாம் இடிம்பை என்பாள், அவன்பா லணுகி,

எம்முனேவலால் யான் மலைந்திடற்
　　கெய்தினேனினைக் கொன்றுமென்பயன்
அம்மவெற்பிரண் டனையபொற்புயத்
　　தழகெறிக்குநீ டாரமார்பகேள்
கொம்மைவெம்முலைத் தெரிவையர்க்குளம்
　　கூசுமாசைநோய் கூறுகிற்பதென்
றெம்மனோர்களுஞ் சொல்வர்யானுனக்
　　கெங்ஙனேகொலா மிறுதிகூறுவேன்

என எடுத்தியம்பி உறுதி கூறினாள். சூர்ப்பணகை நாணினாள்போல் நயம்பிறழ நடித்தாள். இடிம்பையும் அந்நாணத்தை நகுவாள்போல் நடித்தனள். அவ்விருவர்க்கும்மோகம் கால்கிளர்ந்ததன்றி அன்பினதருமையமைந்த காதல் பிறந்ததில்லை. இவ் வயோமுகியின் மனமுந் தன்மையும் வேறு. இவள்,

பேசின னங்கவன் பேசுற நாணாள்
ஊச லுழன்றழி சிந்தைய ளுந்தான்
நேசமி லன்பின ளாயினு நின்பால்
ஆசையின் வந்த வயோமுகி யென்றாள்

[இலக்குவன் அவ்வாறு கேட்க, ஒருவழிப்படாமல் ஊசலாடி வருந்துகின்ற சிந்தையையுடையவளாகி, தன் நிலையைப் பேசுதற்கு நாணாமல், "நேயமில்லாத அன்புடையவளாயினும், உன்னிடத்து ஆசையோடுவந்த அயோமுகி நான்" என்றாள்]

பேசுறநாணினாள் அல்லள், நாணுடையாள் போல் நடித்தாளுமல்லள். எனினும், ஊசலுழலும் தன் சிந்தனையின் வண்ணம் தெளிவுறத் தேறுதவளாகிப் பேசற்குரிய பெற்றியையோராமல்பேதுறவெய்திமொழி சில குழறலுற்றாள். இவள் இலக்குவனைக் கண்ணுற்ற அக்கணமே 'இவனைப் புல்லுவென் அன்றி விழுங்குவெனோ' வென்று விம்மியுழன்றது இவள் உள்ளம். புறத்துறு பெற்றியாய் முதலில் விளைந்த அவ்வையம் இப்பொழுதிவள்மனமுறுசெய்தியாய்வளர்கின்றது. ஏதோவொன்று தன் மனத்தை இயக்குகின்றது என்பது இவளுக்குத்தெரிகின்றது. எனினும், தன்னை இலக்குவனுக்கு அளிக்கவேண்டுமென்னும் அன்போ அல்லது தான் அவனை அடைய வேண்டுமெனும் ஆசையோ என்று உணரமாட்டாமல், ஊசலுழன்று அழிகின்றது அவள் சிந்தை. உண்மையில் இப்பொழுது அயோமுகியை ஊக்குவது அன்பு. அதனை ஓராள் அவள்; ஓர்ந்தாலும் அது தன் குலத்திற்கு இயற்கையன்றெனும் புந்தியால் நம்பமாட்டாள்; நம்பினாலும் அன்புடைய அரக்கி யென்று தன் குலத்தியற்கை பழிப்புறும்படி விளம்பக் கூசுவாள். கொலைத்தொழிற் கொடியோர் தம் நெஞ்சம் ஒருகால் இளகியதென்னின் அதற்கே வெள்கி மறைக்க முயல்வது மரபு. ஆதலாற்றான், 'நேசமில்' என்று தன் மனநிலையை மறைக்கத் துவக்கியவள் நாவினைப் பின் உண்மையே வந்து உந்த, 'நேசமில் அன்பினள்' என்று ஒன்றொன்றோடொவ்வா மொழிகள் தொடரலாயின. இனி, 'ஆயினும்' என்னுஞ் சொல் இதன்பின் பொருளமையப் பொருந்தாமைக்குங் காரணம் இக்குழப்பமே. பிறகு, நேயமில் பகையுமன்று, அன்பினது ஆர்வமுமன்று, மற்று, ஆசையின் தூண்டலே என்னத் துணிந்தனள். தன் இயற்கைக்கு மெய்யன்பு அயலானதென்றும் அடுக்காத தென்றும் நினைத்து, அதனை மறுத்து ஆசையே என்று சாற்றினளாயினும், இவள் இலக்குவன்பால் கொண்டது அன்பே என்னுந் தன்மை, கம்பர் இங்குநிகழ்த்தும் இரண்டொரு குறிப்புக்களினின்று விளங்குவது அருமையன்று. எவ்வாறெனில்,

பின்னு முரைப்பவள் பேரெழில் வீரா
முன்ன மொருத்தர் தொடாமுலை யோடும்
பொன்னின் மணித்தட மார்பு புணர்ந்தென்
இன்னுயி ரைக்கடி தீகுதி யென்றாள்.

[பின்னுஞ் சொல்லுவாள், மிக்க அழகுடைய வீரனே, இதுவரையில் ஒருவரும் தொட்டறியாத என் முலைகளோடு, பொன்போன்ற அழகிய உன் பெரிய மார்பு பொருந்தும்படி தழுவி, எனது இனிய உயிரை விரைவின் கொடுத்தருள்வாய், என்றாள்]

தாலி யொன்றிருப்பினுந் தான் கன்னியே என்பதைத் தெரிவித்துப் புணருமாறுவேண்டுகின்றஇவள், இலக்குவனுக்குத் தன்னை அளிக்கத் தகுந்த தூய்மையே தான் தாங்கியுள்ள் என்பதை உன்னி உவக்கின்றாள். "என்னுயிர் ஈகுதி" என்ற வாசகத்தில் இரத்தலே போல் ஈகின்ற நோக்கமே இருந்து விளங்குகின்றது. இவை, ஆசையின் வந்தவள் வாசகங்கள் அல்ல; அன்பினில் தந்தவைகளே. மற்று,

ஆறிய சிந்தைய ளஃதுரை செய்யச்
சீறிய கோளரி கண்கள் சிவந்தான்
மாறில வார்கனை யிவ்வுரை வாயிற்
கூறிடி னின்னுடல் கூறிடு மென்றான்

[அமைதியடைந்த மனமுடைய அயோமுகி அவ்வார்த்தைகளைச் சொல்ல, கோபங்கொண்ட கொடிய சிங்கம் போன்றஇலக்குவன் கண்கள்சிவந்து, "இவ்வகைச்சொற்களை நீ இனி வாயினாற் சொல்வாயானால், தவறாத எனது நீண்ட அம்பு உன்உடலைத் துண்டாக்கிவிடும்," என்றான்]

இலக்குவன் அத்தீயஉருவத்துவல்லரக்கியின்பால் காதல் கொள்ளாமை இயற்கையே. அவள் காட்டும் அன்பிற்கெதிர் தன் கூரிய அம்பினை இவன் காட்டுவதும் தக்கதன்றி வேறன்று. இத்திறத்தில்வண்மைக்கும் எல்லையுண்டு சூர்ப்பணகை புரிந்ததுபோல் இவ்வயோமுகியும் ஓர் மெல்லியல் நல்லாளாகி வல்லியின் ஒல்கிவந்து இச்சொல்லினை வழங்கியிருப்பாளாயினும், இராமன் அவள்வயின் நிகழ்த்தியதுபோல், இவ்விளையோன் இவள்பால் பரிகசமொழிகள் பேசி விளையாடுந் தரத்த னல்லன். 'பெண்ணுட்ட மொட்டேன் இப்பேருலகத்துள்' என்னு ஒருநாள் சினந்து அறைகூவினவன் இவன். இன்னவாறு தன்பால் இவனுக்கு இரக்கமில்லை என்பது தெரிந்தும் ஆறிய சிந்தை அவ்வயோமுகிக்கு அன்பே நனி பெருகுகின்றது. தன்னையுந் துறக்குந் தன்மை காமத்தே தங்கிற்றாதலின்,

மற்றவ னவ்வுரை செப்ப மனத்தாற்
செற்றிலள் கைத்துணை சென்னியின் வைத்தாள்
கொற்றவ நீயெனை வந்துயிர் கொள்ளப்
பெற்றிடி னின்று பிறந்தனெ னென்றாள்

[இலக்குமணன் அவ்வார்த்தைகளைச் சொல்ல, மனத்தில் யாதும் பகை கொள்ளாதவளாகித் தன் இரண்டுகைகளையுந் தலைமேல் வைத்துக்கொண்டு, "தலைவனே, நீ வந்து என்உயிரைக் கொள்ளப்பெறுவேனேயாயின் இன்றுதான் நான் பிறந்த பயனைப் பெற்றவள் ஆவேன்" என்றாள்]

காதலின் நயமுடைய வாசகம் இதனின்மேல் இல்லை. அரக்கியர்கிடக்க அரம்பையர் வாயிலும் இம்மொழி நயமிகச் சிறக்கும். தன்னைக் கொன்றாலும் தான் வைத்த காதலுக்குக் கைம்மாறு கிடைத்ததென்று கருதும் இச்செம்மைதான் மெய்யன்பின் கட்டளைக்கல். மானுடமங்கையர்க்கரசியர்பால் இதனைக் காட்டுவார் புலவர் பிறர் பிறர். அயோமுகியின் இதயத்தை இம்மெல்லிய அன்பின் இயக்கத்திற்குக் களமாக்கி, கன்னிக் காதலை அளிக்குமொரு பெருமையின் இரகசியத்தை விண்டுரைத்து, அரக்கியர்க்கும் அரிவையர்க்கும் மனமென்பது ஒன்றேயன்றோ என விளம்பவல்ல புணர்ப்பினோர் அக்கவிகளுக்கரசராகிய கம்பரே. இதன்மேல்,

வெங்கத மில்லவள் பின்னரு மேலோய்
இங்கு நறும்புன லுடுதி யேலுன்
அங்கையி னாலெனை யஞ்சலை யென்றால்
கங்கையி னீர்கொணர் வென்கடி தென்றாள்

[கொடும் கோபம் இல்லாதவளாகிய அவள், பின்னரும், "மேன்மையுடையோனே, இங்கு நல்ல நீர் தேடிவந்திருக்கின்றாயானால், உன் அழகிய கையினால் அஞ்சாதே என்று எனக்கு அபயம் அளிப்பாயாயின், மிக விரைவில் கங்கையின் நீரையும் கொணர்ந்து தருவேன்"—என்றாள்]

காதலனொருவனால் இறத்தலும் நன்று; அஃது இல்லையேல் ஏவல் செய்தேனும் பிழைக்கலாம். கங்கையின் நீரையேனுங் கொணர்ந்துதவ உழைக்கின்றது அவள் உள்ளம். இதனோடு கீழ்வரும் ஒரு சிறு ஆங்கில பாசுரத்தை ஒப்புநோக்கலாம்—

Oh, that my blood were water, thou athirst
And thou and I in some far Desert land,
How would I shed it gladly, if but first
It touched thy lips, before it reached the sand.
Once,—Ah, the Gods were good to me,—I threw
Myself upon a poison snake, that crept
Where my beloved—a lesser love we knew
Than this which now consumes me wholly—slept.
But thou—alas, what can I do for thee?
By Fate, and thine own beauty, set above
The need of all or any aid from me,
Too high for service, as too far for love.

இன்ன மென்மைக்கு இலக்காகும் இலக்குவன் அல்லன் இவன். ஆதலின், இதற்கெதிர், "நின்னிரு காதொடு நாசி தமிப்பதன் முன்பு அகல்" என்னவே அவன் கைகளின் பழக்கத்திற் கிணங்கப் பேசினான். வல்லரக்கியேனும் அன்பினா லிளகிய மென்மையளாய் நிற்கின்றளாதலின், இலக்குவன் கூறிய கொடுங்கூற்று அவளை, "என்னே இது, வன்சொல் இப்படியும் வழங்குவாரோ" எனத் திகைக்கும்படி செய்ய, "இமைத்திலள் நின்றனள்" என்று கம்பர் அரிதின் இயம்புகின்றார். நின்றவள் ஒன்று நினைத்தாள்; நினைத்து,

எடுத்தனெ னேகினெ னென்முழை தன்னுள்
அடைத்திவன் வெம்மை யகற்றிய பின்னை
உடற்படு மானுட னேயுறு நன்மை
திடத்திது வேநல னென்றயல் சென்றாள்.

[நான் இவனைஎடுத்துச்சென்று என்னுடையகுகையுள் அடைத்துவைத்து இவன் கோபத்தைத் தணித்த பிறகு, எனக்கு இசைவான். உடனே நன்மை உண்டாம். உறுதியுடைய இக்காரியமே நல்லது, என்று அவனருகு சென்றாள்]

சென்று அவனை எடுத்துக்கொண்டு, சந்திரனோடு செல்லும் மேகம்போலவும், மந்திரமலையைத் தாங்கிய பாற்கடலைப்போலவும், இந்திரனை ஏந்திய பெண்யானை போலவும், குமரக்கடவுளைக் கொண்டு செல்லும் மயில்போலவும் போயினாள். இயம்பும் இவ்வுவமங்களின் மென்மையே கம்பர் அவ்வரக்கியின்பால் இரக்கம் வைத்தார் என்பதைக் காட்டுகின்றது. அந்தக்காலை,

ஆங்கவண் மார்பொடு கையி னடங்கிப்
பூங்கழல் வார்சிலை மீளி பொலிந்தான்
வீழ்கிய வெஞ்சின வீழ்மத வெம்போர்
ஓங்க லுரிக்கு முரித்திர னொத்தான்

[அவளது மார்பிலும் கையிலும் அடங்கி விளங்கிய, அழகிய கழலை அணிந்தவனும் நீண்ட வில்லை ஏந்தியவனும் ஆகிய இலக்குவன், மிக்க கொடிய கோபத்தையும் வழிகின்ற மதத்தையும் உடையதாய்க் கொடிய போரைச் செய்கின்ற யானையை உரிக்கும் சிவபிரானை ஒத்தான்]

அப்பர்

அப்பரும் அறுபத்திஞன்கு கலைகளும்—30. வியாகரணம்

[777-வது பக்கத் தொடர்ச்சி]

IV. அறுசீர்ச் சந்த விருத்தம்

தமிழிலுள்ள அறுசீர்ச் சந்த விருத்தங்கள் ஒன்பது வகையாகும். இவையனைத்தும் தமிழிலே யுற்பத்தி யானவைகளாம். இவற்றில் யாதும் வடமொழியி னின்று வந்ததன்று. எனினும், வடமொழியினின்று வந்த சிலவற்றைச் சார்ந்து விருத்தியடைந்தனவுமுள. அவையாவன:—

(1) மூன்றுமாத்திரை யளவுள்ள ஆறுசீரும் அடியி னந்தத்தில் ஒரு நெட்டெழுத்தோசையும் பெற்றது

(உ-ம்) மாவி னுரிவை மங்கை
வெருவ மூடி முடிதன்மேல்
மேவு மதியு(ம்) நதியு(ம்)
வைத்த விறைவ(ர்) கழலுன்னும்
தேவ(ர் தேவ(ர்) த்திரு
லத்த(ர்) த்ரங்க(ன்) முகவன்சேர்
காவு(ம்) பொழிலு(ம்) கடுங்க(ற்)
சுனைசூ(ழ்) கயிலை மலையாரே

சம்பந்தர்-திருக்கயிலாயம்-பண்-தக்கேசி 6.

மாத்திரையளவுக்கு மிகைப்படும் ஒற்றுக்கள் சம் பந்தர் பாடலிசையில் ஒங்காதனவாகையால், அவற் றைக் கணக்கில் * எடுக்கக்கூடாது.

இவ்வினத்தில் மற்றொருவகையுமுண்டு. அதாவது அரையடியீற்றில் நெடில் மிகுவது. (உ-ம்)

கோல மாய நீண்ம(தில்) கூட லால வாயிலாய்
பாலனுய தொண்டு(செய்)துபண்டுமின்று முன்னையே
நீல மாய கண்ட(னே) நின்னை யன்றி நித்தலும்
சீல மாய சிந்தை(யிற்) றேர்வ தில்லை தேவரே!.

சம்பந்தர்-திருவாலவாய்-திருவிராகம்-பண்-கௌசிகம் 5.

(2) நெடிலீற்றுப் புளிமா ஆறும் அடியின் இறுதி யில் ஒரு நெடிலோசையும் பெறுவது (உ - ம்).

நறவ நிறைவண் டறைதார்க்
கோன்றை நயந்து நயனத்தால்
சுறவஞ் செறிவண் கொடியோ
னுடலம் பொடியா விழிசெய்தார்
புறவம் முறைவண் பதியா
மதியார் புரமூன் றெரிசெய்த
இறைவன் அறவன் இமையோ
ரேத்த உமையோ டிருந்தானே.

சம்பந்தர் - திருப்புறவம் - பண் - தக்கேசி 1.

[குறிப்பு "கொன்றை," "ஏத்த" என்னும் சீர்க ளுக்கு முன்சீர் ஓசை சற்று நீண்டு ஒலிப்பதால், இ ங்குத் "தேமா"ச்சீர் இசையில் பொருந்தும்.]

(3) ஆறு கூவிளச் சீருடன் அடியின் அந்தத்தில் ஒரு நெடிலோசை பெறுவது. அரை அடியின் அந் தத்திலும் நெடிலோசை பெற்று வருவதும் உண்டு. அதைத் திருவாசகத்தில் காணலாம். (உ - ம்)

முத்துநற் றாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்துக வரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ணமி டித்துநாமே.

திருவாசகம் - திருப்பொற் சுண்ணம் 1.

நெடிலோசை அடியின் ஈற்றில் பெறுமல் இச்சந்த விருத்தம் வருவதுமுண்டு. இதற்கு உதாரணம்:—

மேகவொ ழுங்குகண் முன்னொடு
மின்னிரை தம்மிடை யேகொடு
மாகம ருங்கினு மண்ணினும்
வல்லுரு மேறெதிர் செல்வன
வாகைநெ டும்பல கைக்குல
மாள்வினை வாளுடை யாடவர்
காகமி டைந்தக ளத்திரு
கைகளின் வந்துக லந்தனர்.

பெரிய புராணம் - ஏனுதி நாதர் புராணம் 15.

இவ் வறுசீர்ச் சந்தவிருத்தம் அஸ்வகதியென்னும் சந்தக் கலித்துறையில் ஒரு சீர் அதிகரிப்பதால் உண் டாகக் கூடியதாம். அஸ்வகதிக்கு விதி "குற்றுயிரா லிறு கூவிள மைந்தொடு கூடிய நேர்" பெற்றதென் றும், இவ்வறுசீர் "குற்றுயிரீற்றறு கூவிளையோடொ ரு நெட்டுயிர் கூடிடுமால்" என்றும், விருத்தப்பாவி யல் கூறும். மற்றொரு சீர் (கூவிளம்) அதிகரிக்குமா யின், அது மானினியென்னும் எழுசீர்ச் சந்தவிருத்த மாகும்.

(4) நாலு மாத்திரை யளவுள்ள விளச்சீர்களாலும் மாச்சீர்களாலும் ஆக்கப்படுவது மற்றொருவகை அறு சீர்ச் சந்தவிருத்தமாகும். (உ - ம்)

சுரும்பு சேர்சடை முடியினன்
மதியொடு துன்னிய தழல்நாகம்
அரும்பு தாதவிழ்ந் தலர்ந்தன
மலர்பல கொண்டடி யவர்போற்றக்
கரும்பு கார்மலி கொடிமிடை
கடிக்குளத் துறைதரு கற்பகத்தை
விரும்பு வேட்கையொ டுளமகிழ்ந்
துரைப்பவர் விதியுடை யவர்தாமே.

சம்பந்தர் - திருக்கடிக்குளம் - பண் - நட்டராகம் 5.

(5) விளத்தையடுத்த*காய்ச்சீர்களுடையதாய்விள மானது கொண்டு முடிந்த ஒரு கனிச்சீரும் தோன்றி

---

* வறியா ரெனவல் லொலியோங் கலிலாக்
குறியே யெறியப் படுகொள் கையதே
நெறிவேண் டுழியே நிலையா மதுவே
வறியா ரொருக்கால் வகையா குவபோல்.

விருத்தப் பாவியல்-ஒழிபியல் 5.

* காய்விளம டுத்தவொரு சீர்விளமி றுத்தகனி
காமுறவு தித்தியலுமால்
வேய்புரை துணைக்கரமு மாந்தளி ரெனத்திகழு
மேனியுமு டைச்சுரிகுழல்
காய்விளம டுத்தவொ ரெவர்திறமி டத்தினது
காணுறுநெ டிற்கடையெனப்
பாய்புன லுடுத்தவுல கோரிதனெ ழுத்தளவு
பாங்குறவி ளத்தனரரோ.

—விருத்தப் பாவியல்.

யினிதாய் நடக்கின்ற அறுசீர்ச் சந்தவிருத்தம் மற்றொருவகை. விளத்தை அடுத்தனவாகிய காய்ச்சீர்களுக்கு மாத்திரை யைந்து. கடைச்சீர் ஐந்து மாத்திரையோடு கடையில் நெட்டெழுத்து இருப்பதால்கனிச்சீர் உருவம்பெற்று ஏழு மாத்திரை பெறும். இவ்வகை விருத்தங்கள் இரட்டித்துவருவதைத் தாயுமானார் பாடல்களில் காணலாம். (உ - ம்)

காயாத மரமீது கல்லெறி செல்லுமோ
 கடவுளே யாங்களடியேங்
கர்மபந் தத்தினாற் சன்மபந் தம்பெறக்
 கற்பித்த துன்னதருளே
வாயார வுண்டபேர் வாழ்த்துவது(ம்) நொந்தபேர்
 வைவதுவு மெங்களுலக
வாய்பாடு நிற்கநின் வைதிகவொ ழுங்குநினை
 வாழ்த்தினாற் பெறுபேறுதான்
ஓயாது பெறுவரென முறையிட்ட தாற்பின்ன
 ருளறுவது கருமமன்றாம்
உபயநெறி யீதென்னி னுசிதநெறி யெந்தநெறி
 உலகிலே பிழைபொறுக்குந்
தாயான கருணையு முனக்குண் டெனக்கினிச்
 சஞ்சலங் கெடவருள்செய்வாய்
சர்வபரி பூரணவ கண்டதத் துவமான
 சச்சிதா னந்தசிவமே.

தாயுமானவர் - சச்சிதானந்த சிவம் 8.

இப் பன்னிரு சீர்ச் சந்தவிருத்தம் மேற்கண்ட அறுசீர் இரட்டியுண்டானதாகும். கீழ்வரும் சம்பந்தர் பாடலும் இவ் விருத்தவகையே:—

ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை
 யுடைத்தாய வாழ்க்கையொ ழியத்தவம்
அடங்குமி டங்கருதி நின்றீரெல்லாம்
 அடிகள்ள டிநிழற்கீ ழாளாம்வண்ணம்
கிடங்கும் மதிலுஞ்சு லாவியெங்கும்
 கெழுமனைக டோறும்ம றையின்னொலி
தொடங்கும் கடந்தைத்த டங்கோவில்சேர்
 தூங்கானை மாடம்தொ ழுமின்களே.

சம்பந்தர்-திருத்தூங்கானைமாடம்-பண்-பழந்தக்கராகம்1.

(6) குறிலீற்று மாங்காய்ச் சீரினால் ஆறுசீரும் ஆக்கப்பட்டது மற்றொருவகை. இதற்கு விருத்தப் பாவியல் (விதியாகிய) உதாரணம்:—

கள்ளூறு போதோக டுங்காம னம்போக
 ருங்கால னேவன்றெனி
னள்ளார்ந டுங்கத்த னிச்சூர னேயேந்து
 நாமப்பு லால்வேல்கொலோ
கள்ளார்க டித்தாம ரைத்தேன ருந்துங்க
 ரும்புள்ளெ னத்தக்கதோ
உள்ளூறு காமக்கொ டுந்தீம ருந்தேயொ
 ளிக்கார்நி றக்கண்களே.

(7) ஒற்றை யடுத்த குறிலையேனும் நெட்டெழுத்தையேனும் இறுதியில்பெற்று விளச்சீர்களால் ஆக்கப்படுவது மற்றொருவகை அறுசீர்ச் சந்தவிருத்தமாகும். இதற்கு அடியின் ஈற்றில் நேடிலோசையும் அல்லது அரை அடியி னிறுதியிலும் நெடில் வருவதும் உண்டு. அதைச் சம்பந்தர் தேவாரத்தில் காணலாம். இதற்கு விருத்தப்பாவியல் ஆசிரியர் தந்த உதாரணமாவது:—

ஓதவார் கடலகத் துள்ளவா ரமிழ்தென
 ஓதினர் புலவர்மற்றும்
தீதிலாத் தீங்கனிச் சுவையெனப் பாலெனத்
 தேமொழிக் குவமைசொன்னார்
ஏதமே புலனுறு வழிநினைப் பாலவை
 யின்பமே நல்கிலாவால்
யாதெனக் கூறுகே னின்மொழிப் பண்பைநா
 னேந்திழைப் பொற்கொடிக்கே.

(8) ஐந்து மாத்திரைச் சீர்கள் ஐந்தும் கடையில் ஏழு மாத்திரைச் சீருமாய் விரவிவருகின்ற அறுசீர்ச் சந்த விருத்தம் மற்றொருவகை. எனவே நெடிலேனும் மெய்யேனும் இறுதி யடையப்பெற்ற விளச்சீர்கள், குறிலீற்று மாங்காய்ச் சீர்கள், மூன்று குற்றெழுத்தால் முடிந்த விளங்காய்ச் சீர்கள் ஆகிய இம் மூவகைச் சீர்களும் ஐந்து மாத்திரையாகலான், முதலைந் திடங்களில் வரத்தக்கன. இறுதியில் ஆறுவது சீராக வருவன எவையெனில், ஒரு நெடிலை ஈற்றில் பெற்ற ஏழுமாத்திரை யளவுள்ள இந்த மூவகைச் சீர்களுமேயாம். அவையாவன:—மெய்யெழுத்து நடுவே மிகுந்த விளங்காய்ச் சீர்களும், மூன்று குறில் நடுவே பெற்ற விளங்கனிச் சீர்களும், மாங்கனிச் சீர்களுமாம். இதை,

ஓதியவு டம்பதனை யாதகுறி லீற்றொன்ற
 தொழிகூவி ளக்கருவிளச்
சாதியென நடுமெய்ம் மிகாவிளங் காயெனத்
 தனிவந்த குறிலீற்றகாய்ப்
பேதமென வருமைந்து மாத்திரைச் சீர்களும்
 பின்னோர்நெ டில்பெற்றவும்
மேதகுவி ருத்தமென வான்றமிழ்ப் புலவருற
 வேண்டினர றிந்துமாதோ.

என்னும் உதாரணத்தால் இவ்விதியைவிருத்தப்பாவியலாசிரியர் விளக்கி இருப்பதனைக் காண்க. ஆகையால் இவ்வகையில் உபவகையாய் (மூன்றுக்கு மூன்று) ஒன்பதுள்ளன; ஆங்காங்குத் தமிழிலக்கியத்தில் வருவன காண்க.

(9) ஒன்பதாவது வகை அறுசீர்ச் சந்தவிருத்தம் சம்பந்தர் பாடிய "தோடுடைய செவியன்" என்னும் நட்டபாடைப் பண் பெற்றது. இது அப்பர் காலத்தில் அரிய இசையெனக் கொண்டாடப்பட்டது. இயற்றமிழ் யாப்பில் இதன் அலகு பின்வருமாறு:-

இந்தச் சந்தவிருத்தத்தின் முதல்சீர் ஒருநெடிலும் ஒரு குறிலுமால் ஆக்கப்பட்ட தேமாச்சீர், இரண்டாஞ்சீர் மூன்று குற்றெழுத்தாலாகிய சிறியகூவிளங்காய், மூன்றாஞ்சீரும் நான்காஞ்சீரும் குறிலீற்றுக் கூவிளம், ஐந்தாஞ்சீர் தேமா, ஆறாஞ்சீர் புளிமாங்காய் ஆக வருவது.

[இது பொதுவிதி ஆயினும் சம்பந்தர் இசைக்குப் பொருத்தமாய்ச் சீர்களின் உருவத்தை மாற்றுவதும் உண்டு.]

(உ-ம்)காதி யங்குதழை யன்னிழை
 சேர்திரு மார்பன் னொருபாகம்
மாதி லங்குதிரு மேனியி
 னன்கரு மானின் னுரியாடை
மீதி லங்கவணிந் தானிமை
 யோர்தொழ மேவு மிடஞ்சோலை
போதி லங்குநசை யால்வரி
 வண்டிசை பாடும் புகலூரே.

சம்பந்தர்—திருப்புகலூர் - பண் - நட்டபாடை - 2

இவ்வாறு மேற்கூறிய விதியின் வண்ணம் வாராது சீர்கள் மாறுபட்டு வருவது சம்பந்தர் இசைத் தமிழின் சிறப்பாகும். "தோடுடையசெவி" என்பதில், "டையசெவி" முதல் ஐகாரத்தை நீட்டிப்பாடவேண்டும். அவ்வாறு பாடுவதால் அச்சீர் கூவிளங்காய் போல் ஒலிக்குமன்றிக் கருவிளமாய் ஒலிக்காது. அவ்வாறே "தாணுதல் செய்திறை காணிய" என்னும் அப்பதிக ஒன்பதாஞ் செய்யுளில் "நீணுதல் செய்தொழி", "வாணுதல் செய்மக" "பேணுதல்செய்பிர" என்னும் சொற்றொடர்களிலுள்ள "தல் செய்திறை" "தல் செய்தொழி" "தல் செய்மக" "தல் செய்பிர" என்பன தேமாங்கனிச்சீர்களாயினும், "வறியாரென வல்லொலி யோங்கலிலாக் குறியே எறியப்படு"மென்னும் விதியால், கூவிளங்காய்களாய் இசையில் திகழும். இதன்றியும் முதல்சீர் மூன்று மாத்திரை அளவுள்ள தேமாவாதலால், அதற்குப் பதிலாய் அவ்வளவுள்ள புளிமா வமைத்துச் சம்பந்தர் பாடுவதுண்டு. அதைஅப்பதிகத்தில் 5, 6, 7, 8, 11-ம்பாடல்களைக் கூறிக்காணலாம். ஆயினும் பொதுவிதி விருத்தப்பாவியலில் கூறியவாறு:—

ஆதி வாழிநெடி லக்கர
　　முக்குறி லாகும் சிறுகாயே
கோதி லண்டையது குற்றுயி
　　ரீற்றிரு கூவார் விளமென்றே
யோது மூன்றதுட னுன்கது
　　மோங்கிய தேமா புளிமாங்காய்
சீத வெண்மதிமு கக்கரு
　　நீள்விழி மின்னே மடமாதே

என்பதாகும்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[779-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பத்து 2-ம் தசகம்

1-ம் பாசுரம்.

மின்னிடை மடவார்கள் நின்னருள் சூடுவார்
　　முன்புநா னதஞ்சுவன்
மன்னுடை யிலங்கையரண்
　　காய்ந்த மாயவனே
உன்னுடைய சுண்டாயம் நானறிவ
　　னினியது கொண்டு செய்வதென்
என்னுடைய பந்துங்கழலுந்
　　தந்துபோகு நம்பீ.

அவதாரிகை:—இத் தசகத்தைப்பற்றி முன் குறிக்கற்பாலது சிற்சில அம்சங்கள் உள. இது வெகு ரஸமுள்ள கண்டம். சிரிங்கார ரஸம் நிறைந்துளது.

ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் அரங்கநாதப் பெருமாள் வேட்டைக்கும் துஷ்ட ஜந்துக்களின் நிரஸநார்த்தமாயும் கோவிலைவிட்டு வெளியில் எழுந்தருளிக் குதிரை வாஹனம் ஏறி வேட்டையாடியபின் திரும்பிப் போகையில், ஸ்ரீ அரங்கநாயகி அம்மாளிடம் ஸேவை செய்யும் சேடிகள், தங்கள் பிராட்டி பிரணய கோபாவேசத்தால் பெருமாளைக் கோயிலுள் பிரவேசிக்கவொட்டாமல் தடுத்துக் கதவடைக்கும்படி தங்களுக்கு உத்திரவளித்ததாகத் தாக்குவதின் நிமித்தம் தாக்கங்கள் செய்ய இத்தசகத்தை அநுஸந்தித்து, இதிலுளடங்கிய ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அவனது பிரிய கோபிக்கும் நடந்ததாகச் சிறியோர் ஊஹிக்கும் பரஸ்பர சம்வாதத்தை வாக்கியமாய் விஸ்தரித்துஉபயோகிக்கிறார்கள். இதுதான் "பரிவேட்டை" என்றும் "மட்டையடி" என்றும் நடாத்துகிற பிரசித்த உற்சவம். இதை ஸேவை அபிஞ்ஞரான ஸாதுக்களும் விசேஷ அறிவில்லாத ஸாமான்னியரும் கூட்டம் கூடி ரஸாநுபவம் செய்கிறார்கள்.

இத்தசகத்தில், ஸ்ரீ கிருஷ்ணபகவானது பிரிய நாயகியின் பாசுரத்தால் ஆழ்வார் தாம் எம்பெருமானோடு கலப்பேனல்லேன் என்று அன்னியாபதேசத்தால் தன்னின் சுவய நிலையை பகவானுக்கு அறிவிக்கிறார். யாம் உரை குறிப்பதில் ஒவ்வொரு பாசுரத்தினிறுதியிலும் சுவாபதேசக்கிரமத்தைச் சுருக்கி எழுதுவோம். திருவாய்மொழிக்கு முதலில் உரையிட்ட திருக்குருகைபிரான் பிள்ளான் என்பவரின் ஆறுயிரப்படியில் இத்தசகத்துக்கு, சங்கோஜம் விரிவு ஏற்றம் தாழ்வு முதலிய குற்றங்களில்லாமல் தாம் தம் வழக்கம்போல் எழுதும் ஸமஸ்கிருதபதங்கள்கலந்த தமிழில் பொழிப்புரை எழுதி உரையிட்டிருப்பதை யாம் அவர் அருளைமுன்னிட்டுத் தமிழில் நகல்செய்து தருவோம். பாசுரங்களின் உரையிற்கண்ட வண்ணம், கோபிக்கும் கண்ணனுக்கும் சம்வாதம் நடந்துபோன ரூபமாய்ஏற்படுகிறது. பாசுரத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவான் பேசியதாக ஒரு மாற்றமும் கிடையாது. சம்வாதம் முழுவதும் அநுமானமும் ஊஹமும், காவிய ரஸத்தில் தொனியென்று பெயர்பெற்ற அகப்பொருளுமாக ஏற்படுகிறது. ஆறுயிரப்படி விஸ்தரிப்பதை எழுதி அதனில் உள் அடக்கமாய்க் கிடக்கும் தொனியை யாம் எடுத்துக்காட்ட முயல்வோம்.

சுவாபதேச அவதாரிகை

குறிப்பு I. சென்ற தசகத்தில் 6ம் பாசுரத்தில் சிலகுயில்களைத் "தம் மையல்தீர மாற்றம்" பகவானிடத்திலிருந்து "கொண்டு வா" என்று இரந்ததும், 9ம் பாசுரத்தில் "வேறு கொண்டு" Special தூதராய் வண்டினங்களை "இரந்ததும்" பகவானத அறிவுக்கு வந்திருந்தும்தாம் நோவுபடப் பகவான்முன்னொருக்கால் "அஞ்சிறைய மடநாராய்" (1)ம் பத்து (4)ம் தசகத்தில் தூதுவிட்டதின் நிமித்தம் 1-ம்பத்து 5ம் தசகத்தில் "வலவேழுலகின்" படி தாம், ஆழ்வாருடன்கலக்க எழுந்தருளியதுபோல் புறப்பட்டு ஆழ்வார் வியஸநம் தீரப்போகாமல்போனோமேயென்பதும்,பகவான்முன் திரௌபதியைத் துச்சாஸனன் வஸ்திராபஹாரணம் செய்தபோது அவள் நலிவுபட்டுப்பட்டுக் கோவிந்தா வென்று அவள் ஆர்த்த ஸ்வரத்தால் கூப்பிட்டபிறகுதானே தாமதித்துச் சென்றுஉதவினோமே யென்பதும் பீஷ்மர் சரசப்பரத்தில் கிடந்துநோவுபட உடனே ஸேவைஸாதிக்க உதவாமல் ரதம் ஏறித் தாமதித்து ஸேவை கொடுத்தோமே என்பதும் ஞாபகத்துக்கு வர, பகவான் உடனே ஆழ்வாரிடத்துக்கு எழுந்தருளி அவருக்குப் பரமோத்தேசியமான தன் சேவடியைக் காட்டி அவரைத் திருவண்ணகரத்திற்கு

ஏகக் கட்டளையிடவுமாயிற்று. இத்தசகத்தின் 10 பாசுரமும் பகவானிடத்தில் ஆழ்வார் கலப்பேனல்லேன் என்று கோபாவேசத்துடன் ஊடலால் செய்த சில சீற்றங்களும் நிராதரவுகளுமாக வுரைக்கப்பட்டது ஆங்காங்குத் தென்படும்-அந்நியாபதேசத்தில் கோபி, கண்ணன் வேறு சில கோபிமாருடன் உள்ள சிநேகத்தால் தன்னை உபேக்ஷித்ததாகக் காணுகிறதே. சுவாபதேசத்தில் பகவத் பக்தரான ஆழ்வார் பிற பக்தர்களுக்கு ஏற்படும் ஸம்பிரமத்தைப் பற்றிப் பொறுமைப்படலாமோவென்றால், ஆழ்வார் திருவுள்ளம் அப்படியன்று. பகவான் தன்னை எதிர்பாராத பக்தர்களிடம் தாமே சென்று அநுநயப்பிக்கிறானென்று பகவானின் குணநிசயத்துக்கு ஏற்றம் சொன்னபடி என்று பட்டர் என்ற ஆசான் கூறுவாராம். யாம் குறிக்கக்கூடிய தொன்றுளது. சுவாபதேசத்தில் அந்நியாபதேசத்தின் ஒவ்வொரு அம்சத்திற்கும் பிரதிஜோடியாக இணைதேடுவது சரியன்று. முயற்சித்துத் தேடினாலும் அகப்படுவதரிது. சிற்சில அம்சங்களின் ஒற்றுமைகொண்டே கவிகள் திருஷ்டாந்தங்களும் அந்நியாபதேசங்களுமெடுப்பது வழக்கம். ஆழ்வார், பிற பக்தர்களுக்குப் பகவான் செய்யும் பிரஸாத நிறைவு தனக்கில்லையே என்று குறைகொள்வதாக யோசிக்கவேண்டும். ஆழ்வார் ஊடல் கொள்வது நாயக நாயகி பாவத்தில் ஸம்பாவிதம்; விரஹம் ஸஹிக்காமல் அத்தியந்த வேட்கை மிகுதியால் ஏற்படுவதாதலால் குற்றமில்லை.

பதார்த்தம்:—இது ஸ்ரீ கண்ணபகவானுக்குச் செய்த விண்ணப்பம். மின்னிடை மடவார்கள்—மின்னல்போல் நுண்ணிய இடையையுடைய மடப்பமுள்ள பெண்கள், நின் அருள் சூடுவார்—உன் பிரியரூபமான கிருபையைச் சிரஸால்வஹிப்பவர்கள், முன்பு - அவர்கள் பார்த்திருக்க, நான்—நான், அது - என் பந்தையும் கிட்டியும் நீ எடுத்து விளையாடுவதைக் கண்டால், அஞ்சுவன்-உனக்குக் கேடுவிளையுமென்று பயப்படாநின்றேன். மன்னுடைய - ஸ்திரமான, இலங்கை அரண் காய்ந்த மாயவனே - காப்புப் பொருந்திய இலங்கையைச் சுட்ட ஆச்சரிய சக்தியுள்ளவனே, உன்னுடைய சுண்டாயம் - உன்னுடைய Utter Selfishness சுயநல நாட்டமும் பிரயத்தனமும் நான் நன்றாயறிவேன். இனி அதுகொண்டு செய்வது என் - உம்மை நாம் அறிவோமாகையால் அதுபற்றி நாங்கள் ஏமாறமாட்டோம்,ஆகையால் என் பந்தும் அடிக்கும் கிட்டியும் தந்துபோய் விடு. நம்பி-ஸ்திரபரிச்சியம் இல்லாதவர்களை முகபரிசயத்தால் மாத்திரம் விளிக்கும் பதம். விசுவாஸ யோக்கியன் என்றர்த்தம். சுண்டாயம், நம்பி-இப்பதங்கள் திருநெல்வேலி மதுரை ஜில்லாக்களில் நடமாடும் அரும்பதங்கள்.

பொழிப்புரை :—இப்படித் தன்னை நெடுங்காலம் விலகவிட்டு நெருங்கின கலவை யில்லாதிருக்கச் செய்தேயும் தூதுவிட்டு அழைக்கச் செய்தேயும் எம்பெருமான் எழுந்தருளாது ஒழிவது அவன் மனதில் தாழ்வாக மதித்திருப்பதனாலே என்னையுபேக்ஷித்து அவர்கள் (வேறு பிரிய நாயகிகள்) பக்கலுள்ள விசேஷபிரிதியதிசயத்தாலே என்றும், அவர்களைவிட்டுப் பிரிந்தால் தரித்துநிற்க மாட்டாமையாலே என்றும், நிச்சயித்து அத்தியந்தம் கிலேசப்பட்டவளாய்ப் பிரணயகோபமும் பூண்டவளாய் அந்தக் கோபத்தாலே தோழிமாரோடும் கிளிகள் பூவைகள் என்றுள்ள தன்னுடைய விளையாட்டு ஸாதனங்களோடு கூட இனி நாம் அவன் வந்தாலும் அவனைக் கடாக்ஷிக்கக் கடவோமல்லோம் என்று (சங்கேதம்) ஸமயமிட்டுகொண்டு (Programmed) அவன் எழுந்தருளினாலும் வந்தணுகவொண்ணாதொருபடி நல்வார்த்தைகளாலும் (பனிமொழி) மாற்றத்தகாத பிணக்கு பிடித்து நிற்க, எம்பெருமானு மிவளைப்பிரிந்த அதிக வியஸநத்தாலே நிரம்ப கிலேசப்பட்டு இவள் தோழிமார் இவள் போலேயே சீற்றங்கொண்டிருப்பதைக் கண்டு இவர்களைப் புருஷகாரமாக்கி நாயகியை அணுகிப் பனிமொழி கூறித் தன் அபராதத்தைப் பொறுத்தருளச்செய்து இவளுடன் கலவைகூடித் தான் உய்ந்து பிழைத்தல், தன் திருநாமங்களைச் சொல்லிவைத்துப் பழக்கிய கிளி பூவை என்றுள்ள விளையாட்டுச் சேதனங்களின் உதவிகொள்ள அவைகளும் சங்கேதத்துக் குள்பட்டாற்போல மேல்விழவாவது உசாவவாவது செய்யாதிருக்க அவற்றைச் சென்றெடுத்துத் தன் திருநாமங்களைச் சொல்லிவைத்து அவை சொல்லக் கேட்டு ஒருவாறு வேட்கை தீருதல், இப்பிராட்டி பிரணயகோப மூர்க்கத்தாலே இவளினூடலை எவ்விதத்தாலாவது தீர்த்துத் தன் இறந்துபடும் பிராணனை ஒருவாறு மீட்டுத் தன் ஆத்மாவை ரக்ஷித்தல் செய்யப் பெறுமையாலே ஆத்மாவை உய்ப்பான் வேண்டாம், மற்றையபடி ஒருவாறு தரித்துச் சிறுநேரம் நிற்கச் செய்யவாவது அமையுமென்ற சூழ்ச்சி பற்றி எங்களை எடுக்காதே வேண்டா வென்று மறுக்க வாயில்லாத பந்து கழல்களென்ற அசேதந விளையாட்டு ஸாமான்களை எடுத்து அவற்றைத் தன் ஸர்வ அங்கங்களாலும் தீண்டியும் கைகளாற் தொட்டுக் கலந்தும் ஒருவாறு தெளிந்து ஆதம் தாரணம் செய்துகொண்டிருந்த இவனை அபாங்க (ஓதுக்குப்புற) பார்வையாலே பார்த்து நிர்வதிக ஸௌந்தரிய, மடப்பங்களுள்ள உன்னருள் சூடப் பிறந்தவர்களுடைய பந்தும் கழலு மல்லகாணிவை என்னுடைய பந்தும் கழலுமென்ன, ஆனாலென்னன? என்னுடைய பந்தும் கழலுமெடுத்து விளையாடுகிற விதத்தை யவர்கள் காணில் செய்வதென்னென்ன, அடுத்து இல்லாதார் அவர்கள் காண்கைக்கு உபாயமென்ன வென்ன? நான் அடுத்தி லிருக்கச் செய்தே நீயவர்களோடு வந்து பறிமாறிற்றெல்லா மெங்ஙனே கண்டபடி? அப்படியே அவர்களும் காண்பார்களாகாதோ வென்ன? கண்டால்தான் வருவதென்ன? தங்கள் கடாக்ஷ பாத்திரனாயிருந்த வுன்னை யுபேக்ஷிப்பாரென்று பார்த்து நானஞ்சாநின்றேனென்ன? உனக்கு என்னோடு உறவில்லையாகில் வருவதுஎன்னென்ன? என் கிருபையாலே உனக்கு நஷ்டம் வருகிறதென்றஞ்சுகிறேன், அத்தனையே; உறவினால் வருவதல்லவென்றிவள் சொல்ல, இப்படி அஸம்பாவிதங்களை ஏறிட்டுக்கொண்டு வீண் சங்கை எதற்கு? வேறு உத்தேசியங்கொண்டுஇவ்விடம் வரப்பிரசங்கமுண்டோ? உன் பக்கலுள்ள பிரியத்தின் முக்கிய ஹேதுவாலும் உன்னைப் பிரிந்து தரிக்கமாட்டாமையாலே வந்தேன் அத்தனையே யென்றருளிச்செய்ய, என் பக்கலுள்ள ஸ்நேகமா? அது பொய்யல்லவோ வென்ன? நான் யாரேனுமொருவரோடே பறிமாறின் அவர்கள் பக்கல் நட்பைச் செய்பவனோ வென்றவன் அருளிச்செய்ய, உனக்கு யாரேனுமொருவர் திறத்தில் மெய்

யான ஸிநேகமுண்டாகிலவர்களைச் சொல்லிக் காண் என்ன? அசோகவனத்திலே யிருந்த ஸீதாபிராட்டி திறத்து நான் பாராட்டிய அன்பு மெய்யன்றோவென் றருளிச்செய்ய, அதுவும் பொய்யென்று இவள் சொல்ல, அவள் பக்கலுள்ள ஸ்நேகம் பொய்யாகில் அவள் நிமித்தம் இலங்கையை அழிக்கக்கூடுமோவென்று அருளிச்செய்ய, அதென்னை யகப்படுத்தச்செய்த வஞ்சனையென்னுமிடம் மறியேனோ? ஆதலால் என்னுடைய பந்தும் கழலும் தந்து அங்கேபோகு நம்பி, என்று சொல்லுகிறாள்.

யாப்பிலக்கணம்

[780-வது பக்கத் தொடர்ச்சி]

பொருள்கோள்

2. சுண்ண மொழிமாற்றுப் பொருள்கோள்:—செய்யுளில் ஏற்ற சொற்களுக்கு ஏற்ற பயனிலைகள் முறைப்படி அமைக்கப்படாமல் ஏலாத முறையில் அமைக்கப்பட்டிருப்பின், அவற்றுள் எந்தச் சொல்லுக்கு எப்பயனிலை ஏற்புடைத்தோ, அந்தச் சொல்லுக்கு அப்பயனிலையை அமைத்துப் பொருள்கொள்ளுதல் சுண்ண மொழிமாற்றுப் பொருள்கோளாம்.

வரலாறு

கரையாடக் கெண்டை கயத்தாட மஞ்ஞை
சுரையாழ வம்மி மிதப்ப—வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

இந்தச் செய்யுளிலுள்ள சொற்களை இவை நிற்கும் நிலையிற்கொண்டு பொருளாய்வது இயலாது. ஆதலின், 'கானக நாடன் சுனை மஞ்ஞை கரை ஆட, கெண்டை கயத்தாட, சுரை மிதப்ப, அம்மி ஆழ, வரை அனைய யானைக்கு நிலை, முயற்கு நீத்து என்ப,' என்று ஏற்ற சொல்லுக்கு ஏற்ற பயனிலையை அமைத்துப் பொருள் கொள்க.

குறிப்பு:—கயம்- நீர்நிலை, சுரை-சுரையோடு, வரை-மலை, நீத்து-நீஞ்சல்.

3. அடிமறி மொழிமாற்றுப் பொருள்கோள்:—ஒரு செய்யுளில் அமைந்துள்ள எவ்வடியை எவ்விடத்தமைத்துப் பொருள்கொண்டாலும் பொருளமைதி கெடாதிருப்பது அடி மறி மொழிமாற்றுப் பொருள்கோளாம். அடிமறி மண்டில ஆசிரியப்பாவை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

வரலாறு

முருகா முருகா முருகா வெனையாள்
திருமால் மருகா சிவனார் மகனே
மருவார் கடம்பா மயில்வா கனனே
ஒருவா வுலகிற் கொளிமா மணியே.

இச்செய்யுளில் உள்ள எவ்வடியை எங்கமைத்துப் பொருள் கொள்ளினும், பொருளமைதி கெடாமை காண்க.

4. அடிமொழி மாற்றுப் பொருள்கோள்:—செய்யுளின் ஓரடியிலுள்ள ஒருசொல்லை மற்றோரடியிலுள்ள மற்றோர் இயையுஞ் சொல்லோடு மாற்றியமைத்துப் பொருள் கொள்வது அடிமொழி மாற்றுப் பொருள்கோளாம். சுண்ண மொழிமாற்றுக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு இதனால் விளங்கும்.

வரலாறு

ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு.

இதனை, 'வாலின் நெடிய குரங்கு ஆலத்து மேல; குளத்துள குவளை,' என மொழிமாற்றி அமைத்துப் பொருள் கொள்க.

குன்றத்து மேல குவளை குளத்துள
செங்கோட்டு வேரி மலர்.

இதுவுமது. இதனை இளம்பூரணர் மொழிமாற்றுக்கு எடுத்துக்காட்டாகக் கொண்டனர். இவற்றைக் கொண்டுகூட்டுப் பொருள்கோள் என்பாரும் உளர்.

5. பூட்டு வில் பொருள்கோள்:—ஒரு செய்யுளின் முதலினும் இறுதியினும் நிற்கும் சொற்களை விற்குதையில் நாணைப் பொருத்துதல் போல இயைத்துப் பொருள்கொள்ள அமைவது பூட்டு வில் பொருள்கோளாம்.

வரலாறு

திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்து படிற்பெரிதாம் ஏதம்-உறந்தையர்கோன்
தண்ணார மார்பிற் றமிழ்நர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.

இம் முத்தொள்ளாயிரச் செய்யுளில் முதலினும் ஈற்றினும் அமைந்துள்ள சொற்கள் 'கதவு திறந்திடுமின்,' என இயைத்துப் பொருள்கொள்ள நிற்றல் காண்க.

6. புனல் யாற்றுப் பொருள்கோள்:— நீர் தடையின்றி ஒழுகும் யாறுபோலப் பொருள் தொடக்க முதல் இறுதிவரையில் ஒழுங்காகச்சென்றுமுடிவது புனல் யாற்றுப் பொருள்கோளாம். இதனை யாற்றுநீர்ப் பொருள்கோள் எனவும் வழங்குவர்.

வரலாறு

(1) அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்.

இந் நான்மணிக்கடிகைச் செய்யுளில் யாற்றொழுக்காகப் பொருளமைந் திருத்தலைக் காண்க. சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல் விருத்தியுரையில் இச்செய்யுளை அடிமறி மாற்றுப் பொருள்கோளுக்கு உதாரணங் காட்டினர். இது வெண்பா ஆதலின், 'எவ்வடியை எங்கமைத்துப் பொருள் கொள்ளினும் பொருள் கெடாதமைவது' என்னும் அடிமறி மாற்றின் இலக்கணத்தின்படி ஈற்றடியை மாற்றியமைப்பின் செய்யுள் இலக்கணஞ் சிதைதலால் புனல் யாற்றுப் பொருள்கோள் எனலே பொருத்தமெனத் தோற்றுகிறது. மயிலைநாதரும் இச்செய்யுளைத் தாமியற்றிய நன்னூலுரையில் யாற்றுநீர்ப் பொருள்கோளுக்கே உதாரணமாகக் காட்டியுள்ளதும் கருதத் தக்கது.

குறிப்பு:—அலைப்பான் - அழிப்பதற்காக, மிசைதல் - சாப்பிடுதல், சொலற்பால - சொல்லுதற்குரிய சொற்கள்.

(2) சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே.

இச் சிந்தாமணிச் செய்யுளில், 'சொல், கருவிருந்து, ஈன்று, தலை நிறுவி, இறைஞ்சிக் காய்த்த,' எனப் பொருளமைதி ஒழுங்குபெற அமைந்திருத்தல் காண்க. இதுவும் புனல்யாற்றுப் பொருள்கோளாம்.

குறிப்பு:—சொல் - நெல், சூல் - கரு, மேலலார்-கீழோர், தலை நிறுவி - தலையை உயர்த்தி, இறைஞ்சி-வணங்கி.

7. அளைமறி பாப்புப் பொருள்கோள்:—ஒரு செய்யுளின் ஈற்றில் நிற்குஞ் சொல்லேனுந் தொடரேனும் அச்செய்யுளின் இடையினும் முதலினும் சென்று பொருளியைத்து நிற்பது அளைமறி பாப்புப் பொருள்கோளாம். அளை-வளை, பாப்பு - பாம்பு, புற்றில் நுழையும் பாம்பு தலையை மறித்து வளையின் நுழைவாயிலுக்குக் கொண்டுவருவது போல்வதால் இப்பொருள்கோள் இப்பெயர்த் தாயிற்றென்பர்.

வரலாறு

தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து
தண்டூன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து
நாற்கதியிற் சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த
வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்தும்
நெறிமுன்னி முயலா தாரே.

இப்பழம்பாட்டினிறுதியிலமைந்துள்ள, 'வாழ்ந்த பொழுதினேவானெய்தும் நெறிமுன்னிமுயலாதார்,' என்னுந்தொடர்பாட்டின் இடையும்முதலும்சென்று பொருள் தருவதறிக.

குறிப்பு:—நாற்கதி-தேவர், நரகர், மனிதர், விலங்கு; விளிந்து - அழிந்து, மூழ்ந்த - முதிர்ந்த, முன்னி-நினைத்து.

8. தாப்பிசைப் பொருள்கோள்:—ஒரு செய்யுளின் இடையிலுள்ள சொல், அச்செய்யுளின் முதலினும் ஈற்றினும் சென்று பொருளை இயைப்பது தாப்பிசைப் பொருள்கோளாம். தாம்பு-ஊசல், இசை-சொல். ஊசல்போல் இடைநின்று இருமருங்கும் செல்லும் சொல்.

வரலாறு

உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

இத்திருக்குறளில், 'ஊனை உண்ணாமை உள்ளது உயிர் நிலை,' எனவும், ஊனை உண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு,' எனவும் நடுவில் நின்ற 'ஊன்' என்னும் சொல் செய்யுளின் முதலும் இறுதியும் சென்று பொருளிசைத்தமை காண்க.

குறிப்பு:—நிலை-நிற்றல், அளறு-நரகம், அண்ணாத்தல் - வாய் திறத்தல்.

9. கொண்டுகூட்டுப் பொருள்கோள்:—ஒரு செய்யுளின் பல அடிகளினும் பொருள் பொருத்தமின்றி விரவிக்கிடக்கும் சொற்களை எடுத்துப் பொருள் பொருத்தத்திற்குத் தகுதியான இடங்களில் கூட்டிப் பொருள்கொள்ள நிற்பது கொண்டு கூட்டுப் பொருள் கோளாம்.

வரலாறு [கூந்தல்

1. [5]தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட [3]பைங்
[6]வெண்கோழி முட்டை யுடைத்தன்ன [4]மாமேனி
[2]அஞ்சனத் தன்ன [7]பசலை தணிவாமே
[1]வங்கத்துச் சென்றார் வரின்.

இதிலுள்ள சொற்களை, 'வங்கத்துச் சென்றார் வரின், அஞ்சனத்தன்ன பைங்கூந்தல் மாமேனிதெங்கங்காய்போலத் திரண்டு உருண்ட வெண்கோழி முட்டை உடைத்தன்ன பசலை தணிவாமே,' எனக் கொண்டு கூட்டிப் பொருள்கொள்ள 'வேண்டுவதை யறிக.

குறிப்பு:—வங்கம் - கப்பல், அஞ்சனம் - மை, மாமேனி - மாந்தளிரின் நிறத்தையொத்த நிறம், தெங்கங்காய்-தேங்காய், பசலை-காதலரைப் பிரிந்த பெண்டிர் உடலில் படரும் பசப்பு அல்லது தேமல் என்பர்.

2. ஆரிய மன்னர் பறையின் எழூந்தியம்பும்
பாரி பறம்பின்மேல் தண்ணுமை—காரி
விறன்முள்ளூர் வேங்கைவீ தாநாணும் தோளான்
நிறனுள்ளூ ருள்ள தலர்.

இதிலுள்ள சொற்களை, 'அலர் தண்ணுமைதான் நாணும் தோளான், வேங்கை வீ நிறன் காரி விறன் முள்ளூர் உள்ளூர் உள்ளது, பாரி பறம்பின்மேல் ஆரிய மன்னர் பறையின் எழுந்து இயம்பும்,' எனக் கொண்டுகூட்டிப் பொருள்கொள்ள வேண்டுவதாயிருத்தலின், இதுவும் கொண்டு கூட்டுப் பொருள் கோளே யாம்.

குறிப்பு:—அலர் - பலர் அறிந்து தூற்றும் பழிச்சொல், தண்ணுமை - மத்தளம், வீ - புஷ்பம், காரி-ஒரு வள்ளல், பாரி - ஒரு வள்ளல், முள்ளூர்-மலையமான் திருமுடிக்காரி என்னும்வள்ளலின் ஊர், விறல்-வெற்றி, பறம்பு - பாரி என்னும் வள்ளலின் மலை, ஆரிய மன்னர் - வடநாட் டரசர்.

செய்யுள்களுக்குப் பொருளாராயும்போது உலக வழக்குச் செய்யுள்வழக்கு இரண்டையும் அறிந்து, முன்னையோர் மரபின் முரணாது பொருளாராய்தல் வேண்டும். அங்ஙனமின்றேல்பொருள் முட்டுப்பட்டுத் தமக்கும் பிறர்க்கும் இன்னலை விளைக்கும்.

ஏமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

தமிழ்ப்பாடம் 94.

அஷ்ட ப்ரபந்தம்—திருவரங்கத்தந்தாதி

[783-வது பக்கத் தொடர்ச்சி]

கண்ட கனாவின் பொருள்போல யாவும்பொய் கால
[னென்னுங்
கண்ட கனாவி கவர்வதுவேமெய் கதிநல்கெனக்
கண்டகணாவிப்பொழுதேசெல்கென்றருள்காரரங்கற்
கண்டகனாவின்புறக்கண்டுவாழ்த்திக்கடிதுய்ம்மினே

பதப்பிரிவு:—கண்ட கனாவின் பொருள் போல யாவும் பொய் காலன் என்னும் கண்டகன் ஆவி கவர்வதுவே மெய் கதி நல்கு என கண்டகணா இப்பொழுதே செல்க என்று அருள் கார் அரங்கன் கண் தக நா இன்பு உற கண்டு வாழ்த்தி கடிது உய்ம்மின் ஏ.

பதவுரை.

கனாவின் - சொப்பனத்தில், கண்ட - காணப்படுகின்ற, பொருள்போல - பொருள்களைப்போல், யாவும் - நனவில் காண்கின்றவைகளும், பொய் - நிலையற்றதாய்ச்சிறிதுகாலமிருந்து மறைகின்றவைகளாம். (ஆனால் எதுதான் மெய் என்றால்) காலன் என்னும் - யமன் என்கின்ற, கண்டகன் - கொடியவன், ஆவி - உயிரை, கவர்வதுவே - கவர்ந்துகொள்வதே, மெய் - நிச்சயம், (ஆகையால் வீணிற்கு இவ்வுலக வாஞ்சையில் கிடந்து உழலாமல்),

“கதி - உயர்ந்த பரமபதத்தை, நல்கு - அருள்வாய்,” என - என்று (கண்டாகர்ணன் வேண்ட), ‘கண்டகணா - கண்டாகர்ணனே, இப்பொழுதே - இப்பொழுதே, செல்க - பரமபதம் செல்வாயாக’ என்று - என்று, அருள் - அருள்புரிந்த, கார் - கார்மேகம் போன்ற, அரங்கன் - ஸ்ரீரங்கநாதனை, கண் - (உங்கள்) கண்கள், தக - பெருமையடையும்படி, கண்டு - பார்த்தும், நா - நாவானது, இன்பு - இன்பம், உற - அடையும்படி, வாழ்த்தி - துதித்தும், கடிது - விரைவில், உய்ம்மின் - கடைத்தேறுங்கள்.

விளக்கம்:—கண்டகனாவி, என்னும் யமக எழுத்துக்கள், முதலடியில் கண்ட கனாவி(ன்), என இரண்டு சொற்களாய்ப் பிரிந்தன. கண்ட, என்னும் முதல் சொல் பெயரெச்சம். இரண்டாமடியில், கண்டகன் ஆவி, எனப் பிரிந்தன. கண்டகப், என்பதற்கு வடமொழியில் முள் என்பது அர்த்தம். கண்டகன் - முள்ளைப்போன்றவன், கொடியவன். கண்டகன் + ஆவி = கண்டகனாவி, என, ‘நிலைமொழி ஈற்று (ன்) மெய்யின்மேல், வருமொழிமுதல் (ஆ) உயிர் ஏறி, (னா) உயிர்மெய் ஆயிற்று. ஆவி, இரண்டாம் வேற்றுமைத் தொகை. மூன்றாமடியில், ‘கண்டகணா இ’ எனப்பிரியும். முதற்சொல், கண்டாகர்ணன் என்னும் வடமொழிப்பெயர்; கண்டகன் எனச்சிதைந்து, கண்டகணா என எட்டாம்வேற்றுமை பெற்றது. இ, என்பது சுட்டிடைச்சொல். இது முன், கண்டகணா என்னும் சொல்லின் ஈற்றிலுள்ள ஆகார உயிருடன் சேரும்போது வ் என்ற உடம்படுமெய் வர, அதன் மேல் இ ஏறி, வி என ஆயிற்று. நான்காம் அடியில் கண் தக நா இ (ன்புற) எனப்பிரியும். கண் + தக = கண்டக, எனப் புணர்வதன் விதி இனிவரும் இலக்கணப் பாடங்களில் கூறப்படும். நாக்கு, என்னும் பொருளுடைய நா என்னும் சொல் தந்நகரமாயிருந்தாலும் இங்கு யமகத்திற்காக னா என்று றன்னகரமாக எழுதப்பட்டிருக்கின்றது. நா + இன்புற = நாவின்புற என் வகர உடம்படுமெய் வரலாயிற்று.

விரிவுரை:—உலகப் பொருள்கள் யாவும் பொய்த்தோற்றங்களேயன்றி நிச்சயமென்றேனும் நிலையுள்ளனவென்றேனும் எண்ணி வீண்மோசம் போகவேண்டாவென்று கவி முதலில் அறிவுறுத்துகின்றார். “கண்ணால் காண்கின்றோமே, கையால் தொடுகின்றோமே, இப்பொருள்கள் பொய்த்தோற்றமென்றுரைத்தால் நாங்கள் அதனை எவ்வாறு நம்புவோம்! இப்பொருள்களால் இன்பமும் துன்பமும் நாங்கள் அனுபவிக்கவில்லையா,” என்றுகேட்பார்க்குக்கவி கனாவை உதாரணமாகக் காட்டுகின்றார். கனவு கண்டுகொண்டிருக்கும்போது, அங்கு நிகழ்கின்றவைகள் யாவும் நிச்சயம் என்று எண்ணியேயன்றோ இன்பமுந் துன்பமும் அக்கனவினுள் அனுபவிக்கின்றோம். எனினும், அதனிற்காணும் பொருள்களெல்லாம் பொய்யேதான் அல்லவா. நித்திரை தெளிந்ததும் கண்டதவ்வளவும், பட்ட சுக துக்கங்கள் யாவும், பொய்யென்று உணர்ந்துகொள்கின்றோம். அவ்விதமே, நம்மைச் சூழ்ந்திருக்கின்ற மாயை யென்னும் நெடுந்தூக்கத்தில் நேர்கின்ற கனவாம் இவ்வுலக விஷயங்கள். அந்தத் தூக்கந் தீர்ந்து ஞானக்கண்கள் திறக்குமாயின், “இப் பொய் உலகத்தையோ இத்தனைகாலம் நாம்மெய்யென்று எண்ணிப் படாதபாடுபட்டோம்” என்று உணர்பவர் ஆவோம். நம் வாழ்க்கையே நித்திரை யென்றும் அதனுள் விவகரிப்பதெல்லாம் கனவென்றுங் கூறினால், இரவில் உறங்குவதும் அவ்வுறக்கத்துள் கனவுகள்காண்பதும் எவ்வாறுகூடும் என்ற ஒரு ஐயந் தோன்றலாம். நாம் இரவில் தூங்குவது, தூக்கத்துள் தூக்கம்; அந்தக் கனவும் கனவினுள் ஓர் கனவு. கனாக்கண்டதாகவும் அதனை இன்னொருவருக்குச் சொன்னதாகவும் கனவே கண்டுள்ள அனுபவம் சிலருக்கு நேர்ந்திருக்கலாம். எனின், கனவிற்குள் கனவுகாண்பதும் இயலாததன்று. இன்னபடியாவுமே கனவென்பதைக் கவி வற்புறுத்தி இவ்வுலகவாழ்க்கையில்சுகம்போல் தோன்றுகின்றவைகளைக் கொண்டாடி மகிழாமலும், துக்கம்போல் தோன்றுகின்றவைகளுக்கு ஆற்றாமல் வருந்தாமலும், இறப்பதொன்றே நிச்சயம் என்பதை நினைத்து, அதன்பின் பரகதி அடைந்து உய்வதற்குத் திருவரங்கனைக் கண்டுவாழ்த்திக் காலம் கழிக்குமாறு நம்மை அழைக்கின்றார்.

அவ்வாறு அழைக்கும்போது அரங்கனுடைய அருளின் திறத்தை எடுத்துக்காட்டக் கண்டாகர்ணனுடைய கதையைக் குறிப்பிடலாகின்றனர். கண்டாகர்ணன் என்பவன் பாரதப்போர் நடந்த காலத்தில் வசித்தவன் ஒருவன். இவன் சிவபக்தன். விஷ்ணுவை முற்றிலும் வெறுத்துப் பகைத்திருந்தனன். அரியின் பேர் தன்காதிற்கேட்டாலும் பாவம் என்றகொள்கையன். ஆதலால், கோவிந்தா, கிருஷ்ணா, ராமா, என்று பிறர் அழைப்பதும் பேசிக்கொள்வதும் தன் செவியில் நுழையப்படாதென்று தன் இரண்டு காதிலும் இரண்டு பெரிய மணிகளைக் கட்டிக்கொண்டு அவைகள் செய்யும் ஒலியால் அரிநாம மொழிகள் கேளா

வண்ணம் தடுத்துவரலாயினான். (கண்டாகர்ணன், என்பது காதில் மணிகள் கட்டிக்கொண்டிருப்பவன் என்று பொருள்படுமாகையால் இது இவனுக்குக் காரணப்பெயர் ஆயிற்று.) விஷ்ணுவை இவன் இவ்வளவு வெறுத்திருப்பதுடன் விரும்பிச் செய்த சிவபூஜைக்கும் அளவில்லையாயினும், இவன் இறந்தபின் இவனது ஆன்மாவைக் கைலாசத்திற் கழைத்துச் செல்லச் சிவகணங்கள் வரவில்லை. வைகுந்தவாசிகளே இவனது ஆன்மாவை அழைத்துப்போக வந்தனர். இதுகண்டுவியப்பும் வியாகுலமும்அடைந்த இவனது ஆன்மா இவ்விபரீதத்தின் காரணத்தை வினவக்கிருஷ்ணனிடம் வந்துசேர்ந்தது. அப்பொழுது கிருஷ்ண பகவான், “கண்டாகர்ணா, என்னை நீபகைத்ததும் சிவபூஜை செய்ததும் உண்மையே. ஆயினும், என் பேர் கேட்டுவிடப்போகின்றதே என்று எப்பொழுதும் பயந்திருந்த நீ இடைவிடாது என் நாமத்தை எண்ணியிருந்தாய். உன்காதின் மணி அடிக்குந்தோறும் நீ நினைத்தது என் நாமத்தையே. நோக்கம் எதுவானாலும் என்னை நினைப்பவர்கள் என் பக்தர்களே; எப்படியானாலும் மனிதர் என்னை நினைத்தால் போதும்” என்று கூறினார். இதுகேட்ட கண்டாகர்ணன், பகையால் நினைத்தவரையும் வெறுக்காமல் ஏற்றுக்கொள்ளும் கண்ணனது கருணையைக் கண்டு மனமுருகி விழிநீர் வழிய, “அருட்பெருங் கடவுளே, எனக்குமோர் கதிநீ நல்குவாயோ” எனவேண்ட, கிருஷ்ணன், “கண்டாகர்ணா இப்பொழுதே நீ வைகுந்தம் சென்று வாழ்க” என வரமளித்தான். இவ்விதம், தன்னை வெறுத்தவருக்கும் நற்கதியளிக்கும் பரமனை நாம் கண் தகக்கண்டு நா இன்புற வாழ்த்தி வழிபடுவோமாயின் பரமபதம் பெறுவதில் ஐயமுண்டோ, என்று கவி காட்டுகிறார்.

வாராக வாமன னேயரங் காவட்ட நேமிவல
வாராக வாவுன் வடிவுகண் டான்மன் மதனுமட
வாராக வாதரஞ் செய்வனென் றாலுய்யும் வண்ண
[மெங்கே
வாராக வாச முலையேனைப் போலுள்ள மாதருக்கே.

பதப்பிரிவு:—வாராக வாமனனே அரங்கா வட்டம் நேமி வலவா ராகவா உன் வடிவு கண்டால் மன்மதனும் மடவார் ஆக ஆதாரம் செய்வன் என்றால் உய்யும் வண்ணம் எங்கே வார் ஆகம் வாசம் முலையேனை போல் உள்ள மாதருக்கே.

பதவுரை

வாராக - வராக அவதாரம் எடுத்தவனே, வாமனனே - வாமனனாகத் தோன்றினவனே; அரங்கா - அரங்கநாதனே, வட்டம் - வட்டமான, நேமி - சக்கரங்களுடையதேரை அர்ச்சுனனுக்காக ஓட்டிய, வலவா - பாகன் ஆன கிருஷ்ணனே; ராகவா - ரகுவம்சத்தில் ராமனாகப் பிறந்தவனே; உன் - உனது, வடிவு - அழகை, கண்டால் - பார்த்தால், மன்மதனும் - அழகிற் சிறந்தவனும் மற்றவர்க்குக் காமம் மூட்டுகின்றவனுமான மன்மதனுங்கூட (உன்னை அணைத்துச் சேரும் பொருட்டு) மடவார் ஆக - பல பெண்களாக மாறிக்கொள்ளவேண்டுமென்று, ஆதாரம்செய்வன் - ஆசைப்படுவான், என்றால் - என்றால், வார் - கச்சு அணியப்பெற்ற, ஆகம் - மார்பில், வாசம் - வாசனையுடைய சந்தனம் முதலிய பூசியுள்ள, முலையேனைப்போல் - முலைகளையுடைய என்னைப்போல், உள்ள - இருக்கின்ற, மாதருக்கு - பெண்களுக்கு, உய்யும் வண்ணம் - பிழைக்கும் வழி, எங்கே - எவ்விடத்தில் உளது!

கருத்து:—அரங்கனது அழகிற்கு ஆளாகி மன்மதனும் பெண்ணாக வேண்டுமென்று பேதுறுவான் என்பது நிச்சயம். அவ்வாறிருக்க, தானும் தன்போன்ற மாதர்களும் அவ்வரங்கனது வடிவைக் கண்டபின் நாணம் நிறை முதலியவைகளைக் காத்துக்கொள்வதென்பது கூடுமோ என்று கவி, யாவரையும் கடவுள் தன்வயம் ஆக்கிக்கொள்ளுந் தன்மையைப் பாராட்டுகின்றார்.

விளக்கம்:—வாராகவா, என்பன யமகமாய் வந்திருக்கின்றன. இவை முதலடியில், வாராக வா(மனனே) எனப்பிரியும். இரண்டாம்அடியில், வா ராகவா, எனப் பிரியும். இதனில் முதலில் உள்ள, வா என்பது முதலடியின் ஈற்றிலுள்ள ‘வல’ என்பதோடு சேர்ந்து, ‘வலவா’ என்ற எட்டாம் வேற்றுமைச் சொல்லாகின்றது. வலவன், என்பதற்குத் தேர்ப் பாகன் என்பது அர்த்தம். எட்டாம் வேற்றுமையில், ராமன் - ராமா, கண்ணன் - கண்ணா, என்று ஆவது போல், வலவன் என்பது வலவா (தேர்ப்பாகனே) என்று ஆயிற்று. நேமி என்பது தேர்ச்சக்கரம்; அது இங்குத் தேரைக் குறிக்கின்றது. அல்லது, நேமி என்பதைச் சக்கிராயுதம் என்றே கொண்டு, வலவா என்பதற்கு வல்லமை உடையவனே, எனப் பொருள் கூறலாம். சக்ராயுதத்தைச் செலுத்துவதில் வல்லமை உடையவனே, என்று திருமாலை அழைத்தபடியாகும்; அல்லது, வலவா, என்பதற்கு ‘வலப்பக்கமுடையவனே’ என்றும் கூறலாம். அப்பொழுது ‘நேமிவலவா’ என்பது சக்ராயுதத்தை வலது கரத்தில் ஏந்தியவனே எனப் பொருள்படும். ஆயினும், கிருஷ்ணாவதாரத்தைக் குறிக்கும்படி ‘வலவா’ என்பதற்குத் தேர்ப்பாகனே என்று பொருள் கொள்வது நன்கு பொருந்தும்.

மூன்றாம் அடியில்—வார் ஆக ஆ(தரம்) எனப்பிரியும். இதனில் வார் என்பது இரண்டாம் அடியீற்றிலுள்ள மட என்பதோடு சேர்ந்து ‘மடவார்’ என்ற சொல் ஆயிற்று. ஆக, என்பது ஆவதற்கு என்னும் பொருளுடைய வினையெச்சம். அடுத்த, ஆதாரம் என்னுஞ் சொல்லின் முதல் எழுத்தாகிய ‘ஆ’ என்பது வகர உடம்படுமெய்யின்மேல் ஏறி ‘வா’ என நிற்கின்றது.

நான்காவது அடியில்—வார் ஆக வா(சம்) எனப்பிரியும். வார் இறுகியமார்பில் வாசனையுடைய முலைகளைத் தாங்கும் என்போன்ற மாதர், என்பது அவ்வடியின் பொருள்.

இலக்கணம்

உடம்படுமெய்கள் வந்து புணர்கின்ற இலக்கண விதிகள் இதுவரையில் கற்றனவற்றை மறவாதிருந்தால், தமிழ் எழுதும்போது சிற்சில பிழைகள் நேராமல் காக்கலாம். உதாரணமாக, ‘அவன் யிங்கே வரவில்லை’ என்றும், நான், காண யில்லை’ என்றும், ‘கடவுள் யெங்கும் இருக்கின்றார்’ என்றும்; “இது யேன் வீடு” என்றும் “யேன், நீ கடிதம் அனுப்ப யில்லை” என்றும் பலர் எழுதக் காண்கின்றோம். இவ்வுதாரணங்களில் யகரம் வந்திருப்பது அத்தனையும் பிழை.

இந்தப் பிழை எப்படி வரலாகின்றது என்பதையும் எளிதில் தெரிந்துகொள்ளலாம். 'அவனை யிங்கே அழைத்துவா' என்றும்; 'அரசி யெங்கு இருக்கின்றாள்' என்றும்; 'பொன்னை யெனக்குக் கொடு' என்றும்;"நீ யேன் வரவில்லை" என்றும் புஸ்தகங்களில் வந்திருக்கக்காண்கின்றனர். கண்டு,'அவனையிங்கே' என்று எழுதுவது சரியானல்'அவன் யிங்கே' என்று எழுதுவதும் சரியாகத்தான் இருக்கவேண்டும் என்று நினைக்கின்றனர். 'நீ யேன்' என்பது சரியானல் 'யேன் நீ' என்று ஏன் எழுதப்படாது என்று எண்ணுகின்றனர். இதுவுமன்றி ஆனை—யானை, ஆறு—யாறு, என இரண்டுவிதமாகவும் சில சொற்கள் வழங்கப்படுவதும் அவர்தம் கண்களுக்குத் தென்பட்டிருக்கும். இவைகளின் இலக்கணம் தெரியாததால், கண்ணிற்குத் தோன்றுவதையே நம்பி எந்த உயிர்எழுத்திற்கும் பதிலாயும் யகர உயிர்மெய் வந்தாலும் வரலாம் என்று முடிவுசெய்துகொள்ள நேர்கின்றது.

ய, யா யி யீ யு யூ யெ யே யை யொ யோ யௌ என்ற வரிசையில், யி யீ யெ யே யை யொ என்ற ஆறுஎழுத்துக்களும் மொழிக்குமுதலில்ஒருபோதும் வாரா.மற்றஎழுத்துக்களிலும் யானை யாவன் யாங்கு, யாப்பு, என யா என்னும் எழுத்தைத் தவிர மற்ற (ய யு யூ யோ யௌ என்னும்) ஐந்து எழுத்துக்களை முதலாகவுடைய சொற்கள் சமிஸ்கிருத வார்த்தைகளாகவே யிருக்கும். ஆகையால், யிவன், யேன், யெமக்கு, என்பன மொழியின் சரியான உருவங்களல்ல—இவன் ஏன் எனக்கு, என்பனவே அவைகளின் சரியான உருவங்கள். எனவே, யிவன் யேன் யெமக்கு, என்று எழுதப்பட்டிருக்குமானல், முதலில் இருக்கிற யகரங்கள் உடம்படு மெய்களாக வந்து அவைகளின்மேல் இம்மொழிமுதல் உயிர்கள் ஏறியனவாகவே இருத்தல்வேண்டும். யகர உடம்படு மெய் வரக்கூடிய இடங்கள் இப்பொழுது தெரியுமாகையால், இத்தகைய பிழைகளிலிருந்து காத்துக்கொள்வது இனி எளிது. அவன்+இங்கே, என்று சேரும்போது, நிலைமொழியிறுதியில் ன் என்னும் மெய்யெழுத்து இருப்பதால், அதன்மேல்வருமொழி முதல் உயிர் ஏறி 'அவனிங்கே' என்று ஆகக்கூடுமே யொழிய, யகர உடம்படுமெய் பெற்று அவன்யிங்கே என்றாக இயலாது. 'நீ யேன்' எனவரும்; ஏனெனில், நிலைமொழி ஈ என்னும் உயிரில் முடிவதால், வருமொழி முதலில் ஏ என்னும் உயிர் வர, இடையில் யகர உடம்படுமெய் வந்தது. ஆனல் 'யேன் நீ' என வாராது. ஏன் என்பது பதம்; அதுவே முதலாக இருக்கும்போது அதற்குமுன் உடம்படுமெய் வரக் காரணம் இல்லை.

இனி,'போயிருந்தான்,' என்றும்,'காயிலை' என்றும் வருகின்ற இடங்களில், 'போ, கா' என்ற ஓகார ஆகாரங்களுக்குப்பின் (வகரத்திற்குப்பதிலாய்) யகர உடம்படுமெய்கள் வந்திருக்கின்றனவே என்று மயங்க வேண்டா. இவைகளின் முதற் சொற்கள் போ, கா என்பனவல்ல. அவை, போய் காய் என்பனவாகும். ஆகையால், போய்+இருந்தான்=போயிருந்தான், என்றும், காய்+இலை=காயிலை, என்றும், நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழி முதல் உயிர் ஏறி யிகரங்கள் ஆயின—அந்த யகரம், ஆகையால், சொல்லோடு சேர்ந்த மெய் எழுத்தே அன்றி உடம்படு மெய்யாக வந்தது அன்று. வகர வரிசையில், வு வூ வொ வோ என்ற நான்கு எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வாரா. வ வா வி வீ வெ வே வை வௌ என்ற எட்டு எழுத்துக்களும் வரும். ஆகையால், சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி மொழிக்கு முதலில் உள்ள வகரம், உயிர் ஏறிய உடம்படுமெய்யாகவாவது அல்லது வார்த்தையையே சேர்ந்ததாகவாவது கொள்ள வேண்டும். உதாரணம்—'பூவிலை,' என்பது பூவும் இலையும் எனப் பொருள்பட வேண்டுமானல், பூ+இலை என்ற இரண்டு சொற்கள் சேர்ந்து ஆனதாகும். ஆகையால், அந்த வகரம், உடம்படுமெய். அல்லது பூவினது விலை (கிரயம்) என்பது பொருளானல், வகரம் உடம்படுமெய் ஆகாது. அப்படியே, ஆவென்றான் என்பது, ஆ+என்றான், பசுவென்று சொன்னான், என்றும் ஆ+வென்றான் பசுவைச் செயித்தான் என்றும் பொருள்படக் கூடும்.

கலித்தொகை

[785-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 33

இளவேனிற் கால வரவின்கண் ஆற்ருது வருந்திய தலைமகளைத் தோழி ஆற்றி இருக்குமாறு வற்புறுத்தினள். அவ் வுரையை உளம்கொள்ளாது வருந்திக் கொண்டிருந்தாட்குத் தலைவனது வரவையுணர்ந்து தோழி பேருவகையால் கூறி ஆற்றுவித்ததைக் கூறுவது இச்செய்யுள்.

மன்னுயி ரேமுற மலர்ஞாலம் புரவீன்று
பன்னீராற் பாய்புனல் பரந்தூட்டி யிறந்தபிற்
சின்னீரா னறல்வார வகல்யாறு கவின்பெற
முன்னொன்று தமக்காற்றி முயன்றவ ரிறுதிக்கட்
பின்னொன்று பெயர்த்தாற்றும் பீடுடை யாளர்போற்
பன்மலர் சினையுகச் சுரும்பிமிர்ந்து வண்டார்ப்ப
வின்னம ரிளவேனி லிறுத்தந்த பொழுதினன்

விரிகாஞ்சித் தாதாடி யிருங்குயில் விளிப்பவும்
பிரிவஞ்சா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவுங்
கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி
யெரிபொத்தி யென்னெஞ்சஞ் சுடுமாயி னெவன்
[செய்கோ

பொறைதளர் கொம்பின்மேற் சிதரின மிறைகொள
நிறைதளரா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவு
முறைதளர்ந்த மன்னவன்கீழ்க் குடிபோலக் கலங்குபு
பொறைதளர்பு பனிவாருங் கண்ணாயி னெவன்
[செய்கோ

தளையவிழ்பூஞ் சினைச்சுரும்பியாழ்போலவிசைப்பவுங்
கொளைதளரா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவுங்
கிளையழிய வாழ்பவ னாக்கம்போற் புல்லென்று
வளையானு நெகிழ்போடுந் தோளாயினெவன்செய்கோ

எனவாங்கு
நின்னுண்ணோய் நீயுரைத் தலமர லெல்லாநா
மெண்ணிய நாள்வரை யிறவாது காதலர்
பண்ணிய மாவினர் புகுதந்தார்
கண்ணுறு பூசல் கைகளைந் தாங்கே.

(தரவு)

(வரி 1 - 7) மலர் ஞாலம் மன்னுயிர் ஏமுற - அகன்ற உலகத்தில் பல உயிர்கள் இன்பமுறும்படி, அகல் யாறு - அகன்ற ஆறுகள், பல் நீரால் - மிக்கநீர் ஓடுகின்ற கால்களாலே, பாய்புனல் - (தம்மிடத்து வந்து) பாயும் நீரை, பரந்து ஊட்டி - (தாம்) எங்கும் பரந்து உண்பித்து, புரவு ஈன்று - காத்தலைச் செய்து, இறந்த பின் - (அந்நீர்) வற்றிய பின்பு, சில் நீரால் அறல் வார - சிறிது நீர் ஓடுகின்ற கால்களாலே நீர் ஒழுக, கவின் பெற (நிலையுற்ற அவ்வாறுகள்) அழகு பெறும்படி, முன் ஒன்று தமக்கு ஆற்றி முயன்றவர் - முன்னே ஓர் உதவியைத் தமக்குச் செய்து அதன் பொருட்டுப் பெருமுயற்சியைச் செய்தவருடைய, இறுதிக்கண் - கேட்டில், பின் ஒன்று பெயர்த்து ஆற்றும்- பின்பு ஓர் உதவியைத் திரும்பச் செய்யும், பீடுடையாளர் போல் - பெருமையையுடைய தொழிலை ஆளுவாரைப் போல, சினை பல் மலர் உக-(அந்நீரையுண்ட மரங்களின்) கிளைகள் பல மலர்களை அவ் வாறுகளிலே உதிர்க்கவும், சுரும்பு இமிர்ந்து வண்டு ஆர்ப்ப - சுரும்புகள் ஒலி செய்து வண்டுகள் ஆரவாரிக்கவும், இன் அமர் இளவேனில்- இனிமை பொருந்திய இளவேனிற் காலம், இறுத்தந்த பொழுதினன் - வந்து தங்கிய பொழுதிலே.

மன்னுயிர் - பல்லுயிர், 'மன்னுயிர்க்கு அருமையின்' (திருமுருகாற்றுப்படை 278) என்ற விடத்துங் காண்க.

'ஏமம் உற' என்பது 'ஏமுற' என நின்றது.

பன்னீர், சின்னீர் ஆகு பெயர்கள்.

(தாழிசை)

(வரி 8-11) விரிகாஞ்சி தாதுஆடி - மலர்ந்த காஞ்சிப் பூவின் மகரந்தப் பொடிகளில் ஆடி, இருங்குயில் விளிப்பவும் - கரிய குயில்கள் கூவவும், பிரிவு அஞ்சாதவர் தீமை - பிரிந்து உறைதற்கு அஞ்சாத தலைவருடைய கொடுமையை, மறைப்பென்மன் - மறைப்பேன், அதனல் பெற்ற பயன் என்! மறைப்பவும் - மறைப்பினும், கரி பொய்த்தான் கீழ் இருந்த - பொய்ச்சாட்சி சொன்னவன் வந்து (தன்)கீழ்த் தங்கி இருந்த, மரம்போல - மரம் (அழகு கெடுமாறு) போல, கவின்வாடி - (யான்) அழகுகெட்டு, என் நெஞ்சம் எரிபொத்தி - என் மனம் காமத்தீமூண்டு, சுடுமாயின் எவன் செய்கோ - என்னைச் சுடுமானல் அதற்கு யான் என்ன செய்வேன்!

(வரி 12-25) பொறைதளர் கொம்பின் - பூவின் பாரத்தால்தளர்ந்த கிளைகளின்மேல், சிதர் இனம் இறைகொள- வண்டின் கூட்டம் தங்குதல் கொள்ள, நிறை தளராதவர் தீமை - நிறை என்னும் குணம் தளராதவருடைய கொடுமையை, மறைப்பென்மன் - மறைப்பேன், அதனல் பெற்றபயன் என்! மறைப்பவும் - மறைப்பினும், முறைதளர்ந்த மன்னவன் கீழ் - (நாட்டை ஆளும்) முறைமை தளர்ந்த அரசன் ஆளுகையின்கீழ் இருந்த, குடிபோல - குடிகள் (கலங்குமாறு) போல, கலங்குபு - கலங்கி, பொறை தளர்பு - பொறுமை தளர்ந்து, கண் பனிவாரும் ஆயின் - கண்கள் நீர் ஒழுகுமானல், எவன் செய்கோ - அதற்கு யான் என்ன செய்வேன்!

கண்பொறை தளர்தலாவது நீரைத் தம்மிடத்தே அடக்கிவைக்கும் ஆற்றலை இழத்தல்.

(வரி 16-19) தளை அவிழ் பூ சினை- முறுக்கு அவிழ்ந்த அழகிய கிளையிலே, சுரும்பு யாழ் போல இசைப்பவும் - வண்டுகள் யாழ் இசைபோல ஒலிக்கவும், கொளை தளராதவர் தீமை - (தாம் கொண்ட) கோட்பாட்டினின்றும் தளராதவருடைய கொடுமையை, மறைப்பென்மன் - மறைப்பேன். அதனல் பெற்ற பயன் என்!மறைப்பவும் - மறைப்பினும், கிளை அழிய வாழ்பவன் - தன் சுற்றம் கெட வாழ்கின்றவன், ஆக்கம்போல் - செல்வம் (பொலிவு கெடுமாறு) போல, வளை-வளையல்கள், தோள் - கைகளில், ஆனு - தங்குதல் அமையாவாய், நெகிழ்பு ஓடும் ஆயின் - கழன்று ஓடுமானல், எவன் செய்கோ - யான் அதற்கு என்ன செய்வேன்!

(தனிச்சொல்)

என - என்று, ஆங்கு-அசை.

(சுரிதகம்)

(வரி 21-24) எல்லா-தோழியே, நின்உள் நோய்-நினது மனநோயை, நீ உரைத்து அலமரல் - நீ எடுத்துக் கூறி வருந்தாதே, எண்ணிய நாள்வரை இறவாது-(நாம் அவர் வருவர் என்று) எண்ணி இருந்த நாள் எல்லை கடவாமல், கண் உறு பூசல்-கண் உறுகின்ற துன்பத்தை, கைகளைந் தாங்கு - கை நீக்கினற்போல, காதலர் பண்ணிய மாவினர் புகு தந்தார் - நம் காதலர் அலங்கரித்த குதிரையை உடையராய்ப் புகுந்தார்!

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :
பாதாமி லேகியம் ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம் 2 0-0
மஹா திராக்ஷாதி லேகியம் 2-0-0
குழந்தைகளுக்கு
ஸ்ரீகா கஸ்தூரி மாத்திரை 0-4-0
பால சஞ்சீவினி 0-4-0
பால ஸுதா (டானிக்) 1-0-0

தைலங்கள்:
சந்தனதி 6 அவுன்ஸ் ரூ. 1-0-0
அமிர்தாமலக „ 0-12-0
பிருங்காமலக „ 0-12-0
ஸ்திரீகளுக்கு
ஸூதக டானிக் 2-0-0
கர்ப்பாசய டானிக் 2-0-0
ப்ரஸவ லேகியம் 1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. டீ. மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜவரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

வேம்பின் பெருமை:—டாக்டர் வாட்ஸ் என்னும் ஐரோப்பிய வைத்திய நிபுணர் வேம்பைப் பற்றி ஆய்ராந்து வெளியிட்ட பிரசுர மொன்றில், எந்தவூரில் வேம்பு அதிகமாக விருக்கின்றதோ அங்கே ஜுரம் வருவதில்லை யென்றும், வேப்பங்காற்று டைபாயிட் ஜுரக் கிருமிகளைக் கொன்றுவிடுகின்றது என்றும், வேம்பும் ஆடாதுடைம் நியுமோனியா ஜுரத்தை விலக்கவல்லன வென்றும் கூறுகின்றார்.

* * *

மலட்டுவரி:—ஜெர்மன் சர்வாதிகாரியான ஹிட்லர், ஜெர்மனியின் ஜனத்தொகைவளர்ச்சிக்காகப் பல முறைகளைக் கையாண்டு வருகின்றார். சென்றவாண்டு, பிரம்மசாரிகளா யிருப்பதை தடுக்கவேண்டி, கல்யாண உதவி செய்ய ஜெர்மன் கவர்ன்மெண்டில் திட்டம் போடப்பட்டது. பிறகு பிரம்மச்சாரிக்கும் வயதான கன்னிகளுக்கும் வரிபோடப்பட்டது. ஜெர்மன் நாட்டுப் பெண்களால் கையாளப்படும் பிரஜா உற்பத்தி முறையைத் தடுப்பதற்காக ஹிட்லர் மலடாயிருக்கும் பெண்களிடமிருந்து வரி வசூல்செய்யும் சட்டம் ஒன்று செய்துள்ளார் என்று தெரிகின்றது.

189168

* * *

சிறந்த மோட்டார்:—உலகில் இருக்கின்ற மோட்டார் வண்டிகளில் சிறந்ததும், விலையுயர்ந்ததுமான மோட்டார் பாரசீக அரசரிடத்தில் இருக்கின்றதாம். அந்த வண்டியின் விலை 25 ஆயிரம் பவுன் என்று கூறப்படுகின்றது. இந்த வண்டியின் பல பாகங்கள் தங்கத் தகட்டினால் மூடப்பெற்றவையாம். இத்த கட்டில் வைரம் பச்சை நீலம் சிகப்பு முத்து முதலிய நவரத்னங்கள் பதிக்கப்பெற்றிருக்கின்றனவாம்.

நெடிய நாய்:—உலகில் உள்ள நாய்கள் எல்லாவற்றையும் விட அதிக நீளமும் உயரமுமுள்ள நாயொன்று பிரஞ்சுவாசி யொருவரால் வளர்க்கப்படுகின்றதாம். இந்த நாயின் நீளம் 5 அடி $8\frac{1}{2}$ அங்குலமாம். இந்த் நாயைப் பார்ப்பதற்கு ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்தும் பலர் வருகின்றார்களாம்.

* * *

எல்பா மாளிகை:—நெப்போலியன் இறுதியாகத் தோற்கடிக்கப்பெற்று எல்பா என்னும் தீவில் காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்பதை எல்லோரும் அறிவர். அவர் 1814-வருஷ முதல் 1815-பிப்பிரவரி மாதம் வரை அங்கேயிருந்தார். பிரஞ்சு அரசாங்கத்தார் அவர் வசித்த கட்டிடத்தைச் செப்பனிட்டு வருகின்றனர். அக்காலையில் நெப்போலியன் வசம் இருந்த 1000 புத்தகங்களும் ஞாபகச் சின்னமாகக் காப்பாற்றப்பட்டுள்ளன.

* * *

காதற் கடிதம்:—நெப்போலியன் பிரஞ்சு மாதர் சிலருக்கு எழுதிய காதற்கடிதங்களில் எட்டுக் கடிதங்கள் ஒரு பிரஞ்சுக்காரரிட மிருந்ததாம். அவைகளைப் பிரிட்டன் வாசியும், செல்வருமான ஓர் ஆராய்ச்சிக்காரர் 20 ஆயிரம் பவுன் கொடுத்து வாங்கியுள்ளாராம்.

* * *

விமானக் கணக்கு:—இங்கிலாந்தில் 850 ஆகாய விமானங்களும், பிரான்ஸில் 1650 ஆகாய விமானங்களும், ருஷியாவில் 1500 ஆகாய விமானங்களும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1100 ஆகாய விமானங்களும் இருக்கின்றன என்று கணக்கெடுக்கப்பெற்றுளது. இத்தாலிய சுயேச்சாதிகாரியான முஸ்லோனி என்பார், யுத்த பரிகரண முயற்சி நல்ல பயன் அளித்துளது என்பது இதனால் தெரிகின்றது என்று ஒரு கூட்டத்தில் கூறிச் சிரித்தாராம்.

* * *

விவாக ரத்து:—வருஷத்திற்கு வருஷம் இங்கிலாந்தில் விவாகரத்து அதிகமாக நடந்து வருகின்றதாம். 1932-ம் வருஷம் 1931-ம் வருஷத்தைக் காட்டிலும் இரண்டுமடங்கு அதிகமான விவாகரத்து வழக்குக்கள் தொடரப்பெற்றனவாம். 1932-ம் வருஷத்தில் இங்கிலாந்திலும் வேல்சிலும் 4638 விவாகரத்து நடந்தனவாம். இந்த வழக்கில் 100-க்கு 60 வீதமான வழக்குக்கள் பெண்களால் கொண்டுவரப் பெற்றனவாம்.

* * *

700 பாஷைகளில் பைபிள்:—கிறிஸ்தவ மத நூலான பைபில் இதுவரை 700 பாஷைகளில் மொழி பெயர்க்கப் பெற்றிருக்கின்றதாம். சைவ வைணவர்கள் தங்கள் மத நூல்களை 7 பாஷையிலாவது வெளியிட்டிருக்கின்றனரா என்று ஒரு தமிழ் வர்த்தமானப் பத்திரிகையின் ஆசிரியர் கேட்கின்றார்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed
During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000
received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view.
for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., Managers.

அமிர்தசாகரம்
தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய
ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்
அமிர்தசாகரம் போன்றவை.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0
இனும்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இனும்!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)